ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# நம்பெருமாள் விஜயம்

(மலர் – 8) Oct 2007



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

"ஸ்ரீ அஹோபில தாஸன்" க. ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

> கைப் பொருள்கள் முன்னமே கைக் கொண்டார் காவிரி நீர்
> செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
> எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
> சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப் பொருளும் கொண்டாரே.

## அடியேன் உரை

கடந்த நம்பெருமாள் விஜயத்தில் அறிவிக்கப்பட்டபடி http://namperumal.wordpress.com என்ற blog-ல் ஸ்ரீகுணரத்னகோசமும், ஸ்ரீதயாசதகமும் நம்பெருமாளின் திருவுள்ளத்துடன் வந்து கொண்டிருக்கின்றன. அடுத்த முயற்சியாக எம்பெருமானாரின் ஸ்ரீகீதாபாஷ்யமும் தொடராக அதே blog-ல் விஜயதசமி (21.10.2007) முதல் தொடங்கப் பெற்றது.

இந்த மாதம், முதலாழ்வார்களின் திருநக்ஷத்ரம்(20, 21, 22) வருகிறது. அந்த நல்ல நாள்களை ஒட்டி, இந்த இதழில் அவர்களைப் பற்றி, பெரியதிருமுடியடைவு என்ற நூலில் உள்ள குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

ஸர்வம் க்ருஷ்ணார்ப்பணம் ... வாஸுதேவம் ஸர்வம்

ஸ்ரீ அஹோபில தாஸன்

க. ஸ்ரீதரன்

# உட்பொதிவு

1. ஸ்ரீ ரங்கராஜஸ்தவம்
2. ஸ்ரீபாஷ்யம்
3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்
4. முமுக்ஷுப்படி
5. சிறிய திருமடல்
6. அமலனாதிபிரான்
7. முதலாழ்வார்கள்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

# ஸ்ரீரங்கராஜஸ்தவம்
(பகுதி – 8)

71. அங்கை: அஹம்ப்ரதமிகா ஆசரித ஆத்மதாநை:
ஆமோதமாநநவ யௌவந ஸாவலேபை:
ஹை பாரிஜாதம் இவ ஜாதந தாயமாந
சாகாசதம் ஹ்ருதி ததீ (கதமதீமஹி) ரங்கதுர்யம்.

பொருள் – நம்பெருமாளின் ஒவ்வொரு அவயவங்களும் (உடல் உறுப்புக்கள்) – நான் முந்தி, நீ முந்தி – என்று போட்டி போட்டுக்கொண்டு தங்களை அவனது அடியார்கள் அனுபவிக்கவேண்டும் என்று அளிக்கின்றன. அந்த அவயவங்கள் ஒவ்வொன்றும் யௌவனப் பருவம் காரணமாக கர்வத்துடன் உள்ளன. இவைகளைக் காணும்போது, புதிதுபுதிதாதக் கிளைகள் துளிர்த்த பாரிஜாத மரம் போன்று நம்பெருமாள் உள்ளான். இப்படிப்பட்ட நம்பெருமாளை நமது நெஞ்சத்தில் தாங்கி நாம் எவ்விதம் நிலையாக (மயக்கம் அடையாமல்) நிற்போம்? அது கடினமே ஆகும்.

72. ஆலோகா: ஹ்ருதயாளவ: ரஸவசாத் ஈசாநம் ஈஷத் ஸ்மிதம்
ப்ரச்ச்சாயாநி வசாம்ஸி பத்மநிலயா சேத: சரவ்யம் வபு:
சக்ஷுஷ்மந்தி கதாகதாநி த இமே ஸ்ரீரங்க ச்ருங்கார தே
பாவா யௌவந கந்திந: கிம் அபரம் ஸிஞ்சந்தி சேதாம்ஸி ந:

பொருள் – ச்ருங்கார ரஸமே ஓர் வடிவம் எடுத்ததோ என்று வியக்கும்படியாக நிற்கும் நம்பெருமாளே. உனது கடாக்ஷங்கள் அனைத்தும் எங்கள் போன்றவர்களிடம் மிகவும் அன்பு கொண்டவையாக உள்ளன. உன்னுடைய புன்முறுவலானது எப்படிப்பட்ட கல்நெஞ்சத்தையும் உன் வசப்படுத்தும் தன்மை கொண்டதாக உள்ளது. அர்ச்சையில் திருவாய் திறக்கமாட்டேன் என்ற விதியையும் மீறி, உனது உதடுகள் கூறும் சொற்களானவை, ஸம்ஸார துன்பத்தில் வாடுபவர்களுக்கு ஆறுதலான நிழல் தருவதாக உள்ளன. உன்னுடைய அழகான திருமேனியானது, தாமரை மலரில் வீற்றுள்ள ஸ்ரீரங்கநாச்சியாரின் உள்ளத்திற்கு எப்போதும் இலக்கானபடி உள்ளது. நீ திருவரங்கத்தின் வீதிகளில் புறப்பாடு கண்டருளி விட்டு, மீண்டும் பெரியகோயிலுக்குள் புகுவதும் கண்களுக்கு இனிமையாக உள்ளன. இப்படி பல கூறி என்ன? உன்னுடைய யௌவந பருவம் போன்ற பல விஷயங்கள் எங்கள் மனதை குளிரவைக்கின்றன.

73. ஆயத் கிரீடம் அளிக உல்லஸத் ஊர்த்வ புண்ட்ரம்
ஆகர்ணலோசநம் அநங்குச கர்ணபாசம்
உத்புல்ல வக்ஷஸம் உத் ஆயுத பாஹும் அர்ஹந்
நீவிம் ச ரங்கபதிம் அப்ஜபதம் பஜாம:

பொருள் – நீண்ட திருவபிஷேகம் சூடியவனும், அழகான திருநெற்றிக்கு மேலும் அழகு சேர்க்கும் விதமாக கஸ்தூரி திலகம் என்ற ஊர்த்வபுண்ட்ரம் உடையவனும், அழகான செவிகள்வரை நீண்டுள்ள எழிலான கண்கள் கொண்டவனும், மிகவும் அழகான செவிகள் கொண்டவனும், பரந்த திருமார்பு உடையவனும், திவ்யமான ஆயுதங்களைத் திருக்கரங்களில் உடையவனும், எழிலான வஸ்த்ர பந்தனம் உடையவனும், தாமரை போன்ற அழகாகச் சிவந்த திருவடிகள் கொண்டவனும் ஆகிய நம்பெருமாளை நாம் வணங்குவோம்.

74. அப்ஜ ந்யஸ்த பதாப்ஜம் அஞ்சித கடீ ஸம்வாதி கௌசேயகம்
கிஞ்சித் தாண்டவ கந்தி ஸம்ஹநநகம் நிர்வ்யாஜ மந்தஸ்மிதம்
சூடா சும்பி முக அம்புஜம் நிஜபுஜா விச்ராந்த திவ்ய ஆயுதம்
ஸ்ரீரங்கே சரத: சதம் தத: இத: பச்யேம லக்ஷ்மீஸகம்

பொருள் – தன்னுடைய திருவடிகளை பீடமான ஆஸனபத்மத்தில் அழுத்தியபடி நிற்பவனும், அழகான இடுப்புக்கு ஏற்றபடி பாங்காக பீதாம்பரம் உடுத்தியவனும், சற்றே நர்த்தனம் செய்வது போன்று காணப்படும் திருமேனி உடையவனும், இயல்பாகவே புன்னகை தவழும் திருமுகம் கொண்டவனும், உயர்ந்த க்ரீடத்தைத் தழுவியபடி உள்ள தாமரை போன்று மலர்ந்த திருமுகம் கொண்டவனும், தன்னுடைய திருகரங்களில் இளைப்பாறும் எழிலான ஆயுதங்களைக் கொண்டவனும் ஆகிய நம்பெருமாளை நாம் திருவரங்கத்தில் மேலும் ஒரு நூற்றாண்டு வணங்கி நிற்போமாக.

75. அக்ரே தார்க்ஷ்யேண பச்சாத் அஹிபதி சயநேந ஆத்மநா பார்ச்வயோ:
ஸ்ரீபூமிப்யாம் அத்ருப்த்யா நயந சுளகைை: ஸேவ்யமாந அம்ருதௌகம்
வக்த்ரேண ஆவி: ஸ்மிதேந ஸ்ப்புரத் அபயக தா சங்க்க சக்ரை: புஜாக்ரை:
விச்வஸ்மை திஷ்ட்டமாநம் சரணம் அசரணா: ரங்கராஜம் பஜாம:

பொருள் – தனக்கு முன்பாக பெரிய திருவடியான கருடனைக் கொண்டவன், தனக்குப் பின்புறம் ஆதிசேஷனின் தானே சயனித்தபடி உள்ளவன், இரண்டு பக்கங்களிலும் ஸ்ரீதேவி மற்றும் பூதேவியால், எத்தனை அனுபவித்தாலும் த்ருப்தி அடையாமல் தனது ஸௌந்தர்யம் என்னும் அமிர்தத்தை அவர்கள் கண்களால் பருகப்பட்டபடி உள்ளவன், எப்போதும் மாறாத புன்னகையுடன் கூடிய திருமுகம் கொண்டவன், அபய முத்திரை என்ன, கதை–சங்கு–சக்ரம் ஏந்திய திருக்கரங்கள் என்ன என்று வியக்கும்படி தன்னுடைய திருவுள்ளத்தை வெளியிடுபவன் – இப்படிப்பட்ட நம்பெருமாளை, வேறு புகலிடம் இல்லாத நாம் சரணம் அடைவோமாக.

76. ஆர்த்த அபாச்ரயம் அர்த்தி கல்பகம் அஸஹ்ய ஆகஸ்கர க்ஷமாதலம்
ஸத்ய: ஸம்ச் ரித காமதேனும் அபியத் ஸர்வஸ்வம் அஸ்மத் தநம்
ஸ்ரீரங்கேச்வரம் ஆச்ரயேம கமலாசக்ஷு: மஹீ ஜீவிதம்
ஸ்ரீரங்கே ஸ ஸுகாகரோது ஸுசிரம் தாஸ்யம் ச தத்தாம் மயி.

பொருள் – தாங்கள் இழந்துள்ள ஐச்வர்யத்தை மீண்டும் பெற விரும்புபவர்களுக்குப் புகலிடமாக உள்ளவன், மிகவும் அபூர்வமான ஐச்வர்யத்தை வேண்டி வருபவர்களுக்கு கற்பகவ்ருக்ஷம் போன்று அதனை அளிப்பவன், தன்னை அனுபவிக்காமல் ஆத்ம விஷயத்தில் இழிந்த கைவல்ய அதிகாரிகளின் பிழைகளைப் பொறுப்பவன், தன்னையே நாடி வந்து, நித்ய கைங்கர்யத்தை வேண்டும் முமுக்ஷுக்களுக்கு காமதேனு போன்றவன், அனைத்தும் தானேவாக இருப்பவன், என்னுடைய பெருஞ்செல்வமாக உள்ளவன், ஸ்ரீரங்கநாச்சியாருக்கு கண்கள் போன்று உள்ளவன், பூமிப்பிராட்டிக்கு ப்ராணன் போன்று உள்ளவன் – இப்படிப்பட்ட நம்பெருமாளை நாம் அடைவோமாக. அவன் திருவரங்கத்தில் நீண்டகாலம் இருந்து, என்னை மகிழ்விக்கவேண்டும். அவனுக்குக் கைங்கர்யமும் அடிமைத்தனமும் செய்யவேண்டிய சிந்தனையை எனக்கு வளர்த்தபடி இருக்க வேண்டும்.

77. ஸ்வ பண விதாந தீப்ர மணிமாலி ஸுதாம ருசி
ம்ரதிம ஸுகந்தி போக ஸுகசாயித ரங்கதநம்
மத பர மந்தர உச்ச்வஸித நி:ச்வஸித உத்தரளம்
பணிபதி டோலி காதலிமம் ஆச்வஸிம: ப்ரணதா:

பொருள் – (இந்தச் ச்லோகம் தொடக்கமாக பெரியபெருமாளை அனுபவிக்கிறார் – முதலில் அவன் சயனித்துள்ள ஆதிசேஷனைக் கூறுகிறார்). தனது அழகான படங்களில் (படம் எடுத்த தலைகளில்), மேலே கட்டப்பட்ட விதானம் போன்ற படங்களில், இரத்தினக் கற்கள் ப்ரகாசித்தபடி உள்ளன. சிறப்பாக கட்டப்பட்ட மலர்மாலை போன்று அழகு, இளமை, நறுமணம் இவற்றுடன் கூடியபடி இவன் திருமேனி உள்ளது. தன் மீது இன்பமாக கண்வளரும் மிகவும் உயர்ந்த

செல்வமாகிய ஸ்ரீரங்கநாதனை எப்போதும் தாங்கியுள்ளான். இதனால் மந்தமாக ஏற்படும் மேல்மூச்சு–கீழ்மூச்சுகளால் மெதுவாக அசைந்தபடி உள்ளான். இவ்விதமாக பெரியபெருமாளுக்கு ஊஞ்சல் போன்ற படுக்கையாக உள்ள ஆதிசேஷனை நாம் வணங்கி, நம்முடைய துன்பங்களுக்கு ஆறுதல் அடைவோமாக.

விளக்கம் – இங்கு ஆதிசேஷன் மெதுவாக அசைவதாகக் கூறுவது காண்க. தான் அசைந்தால் பெரியபெருமாளின் யோகநித்திரைக்கு இடையூறு உண்டாகிவிடும் என்பதால், மூச்சு விடும்போது, தனது உடலை மெதுவாக அசைக்கிறான். அந்த அசைவானது ஊஞ்சல் மெதுவாக ஆடுவது போன்றுள்ளது.

78. வடதள தேவகீ ஜடர வேதசிர: கமலா ஸ்தந
சடகோப வாக் வபுஷி ரங்க க்ருஹே சயிதம்
வரதம் உதார தீர்க்க புஜ லோசந ஸம்ஹநநம்
புருஷம் உபாஸிஷீய பரமம் ப்ரணதார்த்திஹரம்

பொருள் – (பெரியபெருமாளைத் துதிக்கிறார்) – ஆலிலை, தேவகியின் திருவயிறு, வேதங்களின் சிரஸாக உள்ள வேதாந்தங்கள், ஸ்ரீரங்கநாச்சியாரின் ஸ்தனங்கள், நம்மாழ்வாரின் திருவாய்மொழி – இவற்றில் எவ்விதம் சுகமாக உள்ளானோ அது போன்று ஸ்ரீரங்க விமானத்தில் சுகமாக சயனித்துள்ளான். அனைத்து வரங்களையும் அளித்தபடி உள்ளான். உதார குணம் படைத்த நீண்ட திருக்கரங்கள், நீண்ட அழகான திருக்கண்கள், நெடிய திருமேனி ஆகியவற்றுடன் உள்ளான். தன்னை வணங்கி நிற்பவர்களின் துன்பங்களை நீக்கவல்லவனாகிய பெரியபெருமாளை நான் உபாஸிப்பேனாக.

79. உததி பரம வ்யோம்நோ: விஸ்ம்ருத்ய பத்மவநாலயா
விநிமயமயீம் நித்ராம் ஸ்ரீரங்கநாமநி தாமநி
பணி பரிப்ருட ஸ்பார ப்ரச்வாஸ நி:சவஸித க்ரம
ஸ்கலித நயநம் தந்வந் மந்வீத ந: பரம: புமாந்

பொருள் – திருபாற்கடல், ஸ்ரீவைகுண்டம் ஆகியவற்றை மறந்தான், ஸ்ரீரங்கநாச்சியாருக்கு மாற்றான யோக நித்திரா தேவியைத் தழுவினான், திருவரங்கம் என்னும் பெயர் கொண்ட க்ஷேத்ரத்திற்கு வந்தான், ஆதிசேஷனின் பலத்த மேல்மூச்சு–கீழ்மூச்சுகளால் தனது கண்கள் கூச, மெதுவாக மூடியபடி உள்ளான் – இப்படிப்பட்ட பெரியபெருமாள் நம்மை தனது திருவுள்ளத்தில் எப்போதும் நிலைநிறுத்துவானாக.

விளக்கம் – இறுதி வரியில் மிகவும் ரஸமான விஷயம் உள்ளது. பெரியபெருமாள் உறங்கும்போதும் நம்மை நினைக்கவேண்டும் என்றார். நாம் விழித்துள்ளபோது அவனை நினைப்பதில்லை. அவனோ உறங்கும்போதும் நம்மை நினைத்தபடி உறங்குகிறான். என்ன ஒரு வியப்பான செயல் இது.

80. ஜலதிம் இவ நிபீதம் நீரதேந அத்ரிம் அப்தௌ
நிஹிதம் இவ சயாநம் குஞ்ஜரம் வா த்ருகுஞ்ஜே
கமல பத கர அக்ஷம் மேசகம் தாம்நி நீலே
பணிநம் அதிசயாநம் பூருஷம் வந்திஷீய

பொருள் – கருநீல நிறத்துடன் உள்ள ஸ்ரீரங்கவிமானத்தில் ஆதிசேஷன் மீது சயனித்தபடி உள்ளவன், கரிய திருமேனி கொண்டவன், தாமரை போன்ற திருவடிகள், திருக்கரங்கள், திருக்கண்கள் கொண்டவன், மேகத்தின் மூலம் பருகப்பட்ட கடல் போன்று உள்ளவன், அந்தக் கடலில் உள்ள மலை போன்றவன், பெரிய மலைப் புதரில் உறங்கிக் கொண்டுள்ள யானை போன்றவன் – இப்படிப்பட்ட பெரியபெருமாளை நான் வணங்குவேனாக.

விளக்கம் – மேகத்தினால் பருகப்பட்ட கடல் என்பதில் மேகத்தை ஸ்ரீரங்கவிமானமாகவும், கடலைப் பெரியபெருமாள் எனவும் கொள்ளலாம். கடலில் உள்ள மலை என்பதில் கடலை ஸ்ரீரங்கவிமானமாகவும், மலையைப் பெரியபெருமாள் எனவும் கொள்ளலாம். புதரில் உறங்கும் யானை என்பதில் புதரை ஸ்ரீரங்கவிமானமாகவும், யானையைப் பெரியபெருமாள் எனவும் கொள்ளலாம்.

ஸ்ரீபராசரபட்டர் திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ஸ்ரீபாஷ்யம்
(பகுதி – 8)

### 3–2–15 ப்ரகாஸவத் ச அவையர்த்யாத்

பொருள் – ப்ரஹ்மம் ஒளி போன்றது என்ற வரிகள் பயனற்றுப் போய்விடக்கூடாது என்பதற்காக – ப்ரஹ்மம் ஒளி போன்றது – என்று ஏற்கிறோம். இது போன்றே ஏற்க வேண்டும்.

பாஷ்யம் – (கடந்த சூத்திரத்தின் ஸித்தாந்தம்) – தைத்திரீய ஆனந்தவல்லி (2–1) – ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம –உண்மையானது, ஞானமயமானது, எல்லையற்றது ப்ரஹ்மம் – என்ற கூறும் வரிகள் பயனற்றுப் போகக்கூடாது என்பதற்காக ப்ரஹ்மம் ஒளிமயமானது (ஒளி = ஞானம்) என்பதை நாம் ஏற்கிறோம் அல்லவோ? இதே போன்று ப்ரஹ்மம் ஸத்யஸங்கல்பன், அனைத்தும் அறிந்தது, ஜகத்காரணம், அனைத்தின் அந்தர்யாமி, தோஷங்கள் அற்றது – என்று கூறும் வேதவரிகள் பயனற்றுப் போகாமல் இருப்பதற்காக ப்ரஹ்மம் தோஷம் அற்றது, கல்யாண குணங்களுடன் கூடியது என்பதை ஏற்க வேண்டும்.

### 3–2–16 ஆஹ ச தந்மாத்ரம்

பொருள் – ப்ரஹ்மம் ஒளி பொருந்தியது என்பது கூறப்பட்டது, மற்ற ஸ்ருதி வரிகளை ஆட்சேபிக்கவில்லை.

பாஷ்யம் – தைத்திரீய ஆநந்தவல்லி (2–1) – ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம – உண்மையானது, ஞானமயமானது, எல்லையற்றது – என்று கூறும் வரியின் மூலம் ப்ரஹ்மத்திற்கு ஒளி ஸ்வரூபம் (ஞானம்) உள்ளது என்பது மாத்திரமே கூறப்பட்டது. இதன் மூலம் ப்ரஹ்மத்திற்கு உள்ள மற்ற திருக்கல்யாண குணங்கள் ஏதும் மறுக்கப்படவில்லை. ப்ருஹத் உபனிஷத் (4–2–4 ) – நேதி நேதி – என்பதன் மூலம் கூறப்படுவது என்ன என்பதைக் கீழே விவரிப்போம்.

### 3–2–17 தர்சயதி ச அத: அபி ஸ்மர்யதே

பொருள் – ப்ரஹ்மம் உபயலிங்கம் (உபயலிங்கம் = திருக்கல்யாண குணங்கள் கொண்டது, தாழ்வுகளுக்கு எதிர்த்தட்டாக உள்ளது என்ற இரு தன்மைகள்) என்பதை அனைத்து ஸ்ருதிகளும் ஸ்ம்ருதிகளும் கூறுகின்றன.

பாஷ்யம் – கீழே உள்ள பல உபநிஷத் வரிகளின் மூலம் ப்ரஹ்மம் கல்யாணகுணங்கள் கொண்டது, தோஷங்கள் அற்றது என்று கூறப்பட்டது:

- ஸ்வேதாஸ்வதார உபனிஷத் (6–7) – தம் ஈஸ்வராணாம் பரமம் மஹேஸ்வரம் தம் தைவதானாம் பரமம் ச தைவதம் – ஈச்வரர்களுக்கு எல்லாம் மேலான ஸர்வேச்வரன், தேவர்களுக்கு எல்லாம் மேலான தேவன், அனைவரையும் விட உயர்ந்தவன்.

- ஸ்வேதாஸ்வதார உபனிஷத் (6–9) – ஸ காரணம் கரணாதிபாதிபோ ந சாஸ்ய கச்சித் ஜநிதா ந சாதிப: – அவனே அனைத்தின் காரணமாக உள்ளான், இந்திரியங்களுக்குத் தலைவனாக உள்ள ஜீவனுக்குத் தலைவன், அவனை உண்டாக்கியவனோ, அவனுக்குத் தலைவனோ யாரும் இல்லை.

- ஸ்வேதாஸ்வதார உபனிஷத் (6–8) – ந தஸ்ய கார்யம் கரணம் ச வித்யதே ந தத்ஸமச் சாப்யதிகச்ச த்ருச்யதே பராஸ்ய சக்தி: விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஞானபலக்ரியா ச – அவனுக்கு (இந்த உலகில் காணப்படுவது

போன்ற) உடல் இல்லை, இந்த்ரியங்கள் இல்லை, அவனுக்கு நிகரானவன்– மேற்பட்டவன் என யாரும் இல்லை, அவனுடைய சக்தி, ஞானம், பலம் போன்றவை இயல்பாக உள்ளன என்று ஸ்ருதிகள் ஓதுகின்றன.

- முண்டக உபனிஷத் (1–1–9) – ய: ஸர்வஜ்ஞ ஸர்வவித் யஸ்ய ஞானமயம் தப: – அனைத்தும் அறிந்தவன், ஞானமயமானவன்.

- தைத்திரீய ஆனந்தவல்லி (2–8–1) – பீஷாஸ்மாத்வாத: பவதே பீஷோதேதி சூர்ய: – அவனிடம் உள்ள பயம் காரணமாகவே காற்று வீசுகிறது, பயம் காரணமாகவே சூரியன் உதிக்கிறான்.

- தைத்திரீய ஆனந்தவல்லி (2–8) – ஸ ஏகோ ப்ரஹ்மண ஆனந்த: – ஆனந்தமயமான ப்ரஹ்மம் அவனே.

- தைத்திரிய ஆனந்தவல்லி (2–9) – யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வாந்ந பிபேதி குதச்சந – அவனது ஆனந்தத்தின் எல்லையைக் காண இயலாமல் மனமும் வாக்கும் திரும்பிவந்தன, அவனுடைய ஆனந்தத்தை அறிந்தவன் எதற்காகவும் பயப்படுவதில்லை.

- ஸ்வேதாஸ்வதார உபனிஷத் (6–19) – நிஷ்கலம் நிஷ்க்ரியம் சாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜனம் – உறுப்புகள் அற்றவன், செயல்கள் செய்யவேண்டிய அவசியம் அற்றவன், சாந்தமானவன், அடியார்களின் தோஷங்களைக் காணாமல் உள்ளவன், தோஷங்கள் அற்றவன்.

மேலும் ஸ்ரீமத் பகவத் கீதையில் கீழே உள்ள பல வரிகள் கூறப்பட்டன:

- (10–3) – யோ மாம் அஜம் அநாதிம் ச வேத்தி லோக மஹேஸ்வரம் – யார் ஒருவன் என்னைப் பிறப்பற்றவன், தொடக்கம் அற்றவன் (எப்போதும் இருப்பவன்), அனைத்து உலகங்களுக்கும் மேலான ஸர்வேச்வரன் என்று அறிகிறானோ.

- (10–42) – விஷ்டப்யாஹமிதம் க்ருத்ஸ்நம் ஏகாம் சேந ஸ்திதோ ஜகத் – எனது ப்ரபாவத்தின் ஒரு சிறிய பகுதி மூலம் மட்டுமே இந்த உலகை என் வசப்பட்டு இருக்க வைக்கிறேன்.

- (9–10) – மயா அத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸ சராசரம் ஹேதுநா அநேந கௌந்தேய ஜகத்தி பரிவர்த்ததே – என்னையே எஜமானனாகக் கொண்டு, அசைவது–அசையாமல் உள்ளது ஆகியவற்றுடன் கூடிய உலகைப் ப்ரக்ருதி படைக்கிறது, இதன் காரணமாகவே இந்த உலகம் தடை இல்லாமல் இயங்கி வருகிறது.

- (15–17) – உத்தம புருஷ: த்வந்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத: யோ லோகத்ரயமாவிச்ய பிபர்த்யவ்யய ஈச்வர: – மற்ற ஜீவன்களைக் காட்டிலும் வேறுபட்டவன் உத்தமான பரமபுருஷன் ஆவான். இவனே பரமாத்மா ஆவான். அசேதனம், ஜீவன், முக்தி பெற்ற ஜீவன் அடங்கிய மூன்று உலகங்களுக்கும் புகுந்து அவற்றை நியமிக்கிறான்.

- விஷ்ணு புராணம் (5–1–46, 47) – ஸர்வஜ்ஞ: ஸர்வக்ருத ஸர்வஸக்தி: ஜ்ஞாந பலர்த்திமாந் அங்யூநச் சாபி அவ்ருத்திச்ச ஸ்வாதீநோ அநாதிமாந் வசீ, க்லமதந்த்ரீ பயக்ரோத காமாதி பிரஸம்யுத: நிரவத்ய: பர: ப்ராப்தே: நிரதிஷ்டோ அக்ஷர: க்ரம: – அவன் அனைத்தும் அறிந்தவன், அனைத்தையும் படைப்பவன், அனைத்து சக்தியும் உள்ளவன், ஞானமயமானவன், பலம்–சக்தி கொண்டவன் ஆவான், வளர்த்தல்–தேய்தல் அற்றவன், தோற்றம் இல்லாதவன், ச்ரமம் மற்றும் சோம்பல் அற்றவன், பயம் அற்றவன், கோபம் அற்றவன், காமம் அற்றவன், தோஷம் அற்றவன்,

ஸ்வதந்திரமானவன் ஆவான்.

ஆக ப்ரஹ்மம் பல்வேறு பொருள்களிலும் நிலைகளிலும் உள்ள போதிலும் – உயர்ந்த குணங்களுடன் கூடியதாகவும், தோஷங்களால் தீண்டப்படாததாகவும் உள்ளது.

**3–2–18 – அத ஏவ ச உபமா ஸூர்யகாதிவத்**

பொருள் – இதன் காரணமாகவே நீரில் ப்ரதிபலிக்கும் சூர்யன் போன்றவை பரமாத்மாவுக்கு உவமையாகக் கூறப்பட்டன.

பாஷ்யம் – பல விதமான இடங்களில் பரமாத்மா உள்ளபோதும், அந்தந்த இடங்களில் உள்ள தோஷங்கள் மூலம் அவன் பாதிக்கப்படுவதில்லை. சூரியன் ஒன்றாக உள்ளபோதும் – நீரில் தெரியும் பிம்பம், கண்ணாடியில் தெரியும் பிம்பம் போன்றவற்றில் எவ்விதம் ஒரே போன்று உள்ளானோ, அது போன்று பரமாத்மாவும் உள்ளான் என்று ஸ்ம்ருதிகள் கூறுகின்றன. இதனை யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி (3–144) பின்வருமாறு கூறுகிறது:

ஆகாசம் ஏகம் ஹி யதா கடாதிஷு ப்ருதக் பவேத்
ததாத்மைகோ ஹ்யநேகஸ்தோ ஜலாதாரேஷ்விவாம்சுமாந்
ஏக ஏவ ஹி பூதாத்மா பூதே பூதே வ்யவஸ்தித:
ஏகதா பஹுதா ச ஏவ த்ருச்யதே ஜலசந்த்ரவத்

இதன் பொருள் – ஒன்றாகவே உள்ள ஆகாயம் (வெற்றிடம்) என்பது கடம் போன்றவற்றில் எவ்விதம் பலவாகத் தோற்றம் அளிக்கிறதோ, அது போன்றே பரமாத்மா பல பொருள்களில் உள்ளான். ஒரே சூரியன் மற்றும் சந்திரன், பல நீர் நிலைகளில் எவ்விதம் பலவாக காணப்பட்டபோதிலும், தங்கள் தன்மை இழக்காமல் உள்ளனவோ அது போன்று பரமாத்மாவும் ஒரே தன்மையுடன், பல பொருள்களில் இருப்பதாகத் தோன்றுகிறான்.

**3–2–19 அம்புவத் அக்ரஹணாத் து ந ததாத்வம்**

பொருள் – (இது பூர்வபக்ஷி கூறுவது) – நீரில் தெரியும் சூரிய பிம்பம் போன்று, பரமாத்மா பொருள்களில் பொய்யாக இருப்பதில்லை என்பதால், இந்த உவமை பொருத்தமற்றதாகிறது.

பூர்வபக்ஷம் – சூத்திரத்தில் உள்ள – து – என்ற பதம் கடந்த சூத்திரத்திற்கான ஆக்ஷேபத்தைத் தெரிவிக்கிறது. சூரியன் போன்றவை நமது தவறான கணிப்பு காரணமாக, நீரில் உள்ளது போன்று காட்சி அளிக்கிறது, அவை அந்த இடங்களில் பொய்யான தோற்றம் கொண்டுள்ளன. ஆனால் பரமாத்மா அவ்வாறு அல்லன். அவன் அந்தப் பொருள்களில் உண்மையாகவே உள்ளான். இதனைக் கீழே உள்ள வரிகள் தெளிவாகக் கூறிகின்றன:

- ப்ருஹத் உபனிஷத் (3–7–3) – ய: ப்ருதிவ்யாம் திஷ்டந் – பூமியில் உள்ளான்
- ப்ருஹத் உபனிஷத் (3–7–4) – ய : அப்ஸு திஷ்டந் – நீரில் உள்ளான்
- ப்ருஹத் உபனிஷத் (3–7–22) – ய: ஆத்மநி திஷ்டந் – ஆத்மாவில் உள்ளான்

ஆகவே நீர், கண்ணாடி முதலானவற்றின் தோஷங்கள், அவற்றில் பிம்பமாகத் தோன்றும் சூரியன் முதலானவற்றில் ஒட்டவில்லை என்பதற்குக் காரணம், அவை பொய்யாக அங்கு தோற்றம் அளிப்பதால் ஆகும். ஆனால், பரமாத்மா இது போன்று பலவற்றிலும் பொய்யாக இல்லாமல் மெய்யாகவே உள்ளதால், நீங்கள் கூறிய உதாரணம் பொருந்தாது.

தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாதன் திருவடிகளே சரணம்
ஸ்ரீ வேதாந்த தேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்ரீ வேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 8)

## ஸ்வரூபம் – ஸ்திதி – ப்ரவ்ருத்தி என்பவற்றின் விளக்கங்கள்

ஸ்வரூபமென்றது ஸ்வாஸதாரணதர்மத்தாலே நிரூபிதமான தர்மியை. ஸ்திதியாவது இதனுடைய காலாந்தரானுவ்ருத்தி. இதுதான் நித்யவஸ்துக்களுக்கு நித்யையாயிருக்கும் அநித்ய வஸ்துகளுக்கு ஈச்வரஸங்கல்பத்துக்கு ஈடாக ஏறியும் சுருங்கியுமிருக்கும். இங்கு ப்ரவ்ருத்தியாவது ப்ரவ்ருத்தி–நிவ்ருத்தி ரூபமான வ்யாபாரம். இவையெல்லாம் வஸ்துக்கள்தோறும் ப்ரமாண ப்ரதிநியதமாயிருக்கும் ப்ரமாணங்கள் வஸ்துக்களைக் காட்டும்போது அவ்வோ வஸ்துக்களின் ஸ்வரூபத்தையும், ஸ்வரூப நிரூபக தர்மங்களையும், நிரூபித ஸ்வரூப விசேஷணங்களையும், வ்யாபாரங்களையும் காட்டும். அதில் ஸ்வரூபத்தை ஸ்வரூபநிரூபக தர்மங்களாலே விசிஷ்டமாகவே காட்டும். அந்த ஸ்வரூபத்தைச் சொல்லும்போது அவ்வோ தர்மங்களை இட்டல்லது சொல்லவொண்ணாது. அவற்றைக் கழித்துப் பார்க்கில் சச விஷாண துல்யமாம்.

விளக்கம் – ஸ்வரூபம் என்பது ஒரு பொருளுக்கு உள்ள தனித்தன்மையை, அதன் அஸாதாரண தன்மையைக் குறிக்கும். அதன் நீடிப்பு (ஸ்திதி) என்பது, அது காலத்தின் போக்கில் அப்படியே இருப்பதாகும். இத்தகைய நிலையானது நிலையாக உள்ள நித்யவஸ்துக்களுக்கு நிலையாகவே இருக்கும். ஆனால், நித்யம் அல்லாத பொருள்களுக்கு, விரிவதும் சுருங்குவதும் ஆகிய தன்மைகள், ஈச்வரனின் ஸங்கல்பத்திற்கு ஏற்றபடியே இருக்கும். அடுத்து, ப்ரவ்ருத்தி என்பது செயல் புரிவதும், செயல் புரியாமல் உள்ள தன்மைகளும் ஆகும். இவை மூன்றும் (ஸ்வரூபம், ஸ்திதி, ப்ரவ்ருத்தி), பல ப்ரமாணங்கள் மூலம் ஒவ்வொரு பொருளுக்கும் வேறுபட்டே காணப்படும். ஒரு ப்ரமாணமானது, ஒரு பொருளைப் பற்றிக் கூறுகையில், அந்தப் பொருளின் ஸ்வரூபம், அந்தப் பொருளின் ஸ்வரூபத்தை விளக்கும் தன்மைகள், மற்ற தன்மைகள், அதன் செயல்பாடுகள் ஆகிய அனைத்தையுமே குறிப்பிடும். ஸ்வரூபத்தைப் பற்றிக் கூறும்போது, அந்த ஸ்வரூபத்தின் தன்மைகளும் கூறப்படும். ஒரு பொருளுடைய ஸ்வரூபத்தின் தன்மைகளைக் கூறாமல், அதன் ஸ்வரூபத்தைப் பற்றிக் கூற இயலாது. ஒரு பொருளைப் பற்றிய தன்மைகளைப் பற்றிக் கூறாமல், அந்தப் பொருளைப் பற்றி மட்டுமே கூறமுற்படுவது, முயலின் காது பற்றிப் பேசுவது போன்றே ஆகும்.

## ஜீவனின் ஸ்வரூபம்

ஆகையால் ஜீவஸ்வரூபத்தை ஞானத்வம், ஆனந்தத்வம், அமலத்வம், அணுத்வம் இத்யாதிகளான நிரூபக தர்மங்களையிட்டு நிரூபித்து ஞானம், ஆனந்தம், அமலம், அணு என்று இம்முகங்களாலே சொல்லக்கடவது.

விளக்கம் – ஆகவே ஜீவனின் ஸ்வரூபத்தை ஞானம், ஆனந்தம், அமலம் (தூய்மை), அணு ஆகிய தன்மைகள் கொண்டு உரைக்கலாம். அதாவது – ஜீவன் ஞானமயமானவன், ஆனந்தமயமானவன், தூய்மையானவன், அணு போன்ற அளவினன் என்று கூறலாம்.

## ஜீவன் பரம்பொருளுக்கே இயல்பான அடிமையானவன்

இஜ்ஜீவதத்த்வம் ஸர்வேச்வரனுக்குச் சேஷமாயேயிருக்குமென்றும் அவனுக்கே நிருபாதிகசேஷமென்றும் அயோகாந்ய யோக வ்யவச்சேதங்களாலே ப்ரதமபதத்திலே தோன்றின சேஷத்வம் ஸம்பந்தரூபமாகையாலே ஸம்பந்திஸ்வரூபம் நிரூபிதமானாலல்லது அறியவொண்ணாமையாலே ஜீவனுக்கு இது நிரூபித ஸ்வரூப விசேஷணமென்னலாம். அணுத்வே ஸதி சேதநத்வம் போலே ஸ்வத: சேஷத்வே ஸதி சேதநத்வமும் ஜீவலக்ஷணமாகவற்றாகையாலே இச்சேஷத்வம் ஜீவனுக்கு ஸ்வரூப நிரூபகமென்னவுமாம். இப்படி விபுத்வேஸதி சேதநத்வமும், அனன்யாதீனத்வ நிருபாதிகசேஷித்வாதிகளும் ஈச்வர லக்ஷணங்கள். ஜீவேச்வரரூபமான ஆத்மவர்க்கத்துக்கெல்லாம் பொதுவான லக்ஷணம் சேதநத்வமும் ப்ரத்யக்த்வமும். சேதநத்வமாவது ஞானாச்ரயமாகை, ப்ரத்யக்த்வமாவது தனக்குத்தான் தோற்றுகை. அப்போது தர்மபூதஞான நிரபேக்ஷமாக நான் என்று தோற்றும். இப்படி சேதநத்வாதிகள் ஈச்வரனுக்கும் ஜீவனுக்கும் பொதுவாகையாலே அவனிற்காட்டில் வ்யாவ்ருத்தி தோற்றுகைக்காக ஜீவலக்ஷணத்தில் ஸ்வதச்சேஷத்வாதிகள் சொல்லுகிறது. ப்ரதமாக்ஷரத்தில் சதுர்த்தியில் தோற்றின தாதர்த்யத்துக்கு உபாதியில்லாமையாலே ஸர்வரக்ஷகனான ஸ்ரீய:பதிக்கு ஜீவாத்மா நிருபாதிக சேஷமாயே இருக்குமென்று இப்படி யாவத்ஸ்வரூபம் ஸம்பந்தம் சொல்லுகை அயோக வ்யவச்சேதம் மத்யமாக்ஷரத்தில் அவதாரண ஸாமர்த்யத்தாலே அவனுக்கே நிருபாதிக சேஷம், வேறொருத்தருக்கு நிருபாதிகசேஷமென்கை அன்யயோக வ்யவச்சேதம். இச்சேஷத்வம் பாகவதசேஷத்வ பர்யந்தமாக வளரும்படி மேலே சொல்லக் கடவோம்.

விளக்கம் – ஜீவன் என்னும் தத்த்வம் ஸர்வேச்வரனுக்கு எப்போதும் அடிமையாகவே உள்ளான், அவனுக்காகவே உள்ளான், எந்தப் ப்ரதிபலனையும் எதிர்பாராமல் அவனுக்கு அடிமையாக உள்ளான். இதன் மூலம் அவன் ஸர்வேச்வரனுக்காகவே எப்போதும் உள்ளான் (அயோகவ்யவச்சேதம்) என்பதும், மற்றவர்களுக்காக அல்லன் (அன்யயோகவ்யவச்சேதம்) என்பதும் உணர்த்தப்பட்டது. திருமந்த்ரத்தின் முதல் பதமான ப்ரணவத்தின் மூலம், ஜீவன் இவ்விதம் அவனுக்கு அடிமையாக உள்ளான் என்பது கூறப்பட்டது. இதன் மூலம் ஜீவனுக்கு ஸர்வேச்வரனுடன் உள்ள ஸம்பந்தம் கூறப்பட்டது. இப்படியிருக்கையில், இத்தகைய ஸம்பந்தம் இன்றி ஜீவனைப் பற்றி ஏதும் கூற இயலாது. அணு போன்று உள்ளதும், அறிவுடன் உள்ளதும் ஜீவனுடைய தன்மைகள் போன்று, அறிவுடன் உள்ளதும் ஈச்வரனுக்கு அடிமையாக உள்ளதும் ஜீவனின் தன்மைகள் ஆகும். ஆகவே அடிமையாக உள்ளவன் என்பதும் ஜீவனுக்கு ஓர் அடையாளமாக உள்ளது. இது போன்று ஈச்வரனுக்கு அறிவுடன் உள்ளதும், எங்கும் உள்ளதும் (விபுத்வம்) தன்மைகளாக உள்ளன. இது தவிர அவன் மற்ற எதனையும் சார்ந்து இல்லாமல் சுதந்திரமாக உள்ளான் என்பதும், மற்றவற்றிலிருந்து எதனையும் எதிர்பாராமல் உள்ளான் என்பதும் அறியப்படவேண்டும். ஜீவன், ஈச்வரன் முதலான ஆத்ம வஸ்துக்கள் அனைத்திற்கும் சேதநத்வம் மற்றும் ப்ரத்யக்த்வம் ஆகிய இரண்டும் பொருந்தும். சேதநத்வம் என்றால் ஞானத்துடன் உள்ள நிலையாகும். ப்ரத்யக்த்வம் என்றால் தன்னைப் பற்றிய அறிவுடன் உள்ள நிலையாகும். ஜீவனிடம் உள்ள ஞானம் தர்மபூதஞானம் எனப்படும் (இதனைக் கொண்டே ஜீவன் அனைத்தையும் அறிகிறான்). ஆனால் தன்னைப் பற்றி – இது நான் – என்று அறிந்து கொள்ள தர்மபூதஞானம் அவசியமில்லை. இவ்விதம் ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் சேதநத்வமும், ப்ரத்யக்த்வமும் பொதுவாக உள்ளதால், ஜீவனுக்கு உள்ள தன்மையை ஈச்வரத் தன்மைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக, ஜீவன் இயல்பாகவே ஈச்வரனின் அடிமை எனப்படுகிறான். ஆகவே அஷ்டாக்ஷரத்தின் முதல் பதத்தில், அ என்னும் எழுத்து மூலம், எந்தவிதமான எதிர்பார்ப்பும் இன்றி, ஜீவன் ஈச்வரனின் அடிமையாக உள்ளான் எனப்பட்டது. ஆகவே பெரியபிராட்டியின் நாயகனான ஸ்ரீமந் நாராயணனுக்கு ஜீவன் முழுவதுமாக, எதனையும் எதிர்பாராத அடிமையாக உள்ளான் என்பது உணர்த்தப்பட்டது. இப்படியாக ஜீவன் உள்ளவரையில், அவனுக்கும் ஈச்வரனுக்கும் உள்ள உறவுமுறையை அயோகவ்யவச்சேதம் என்கிறோம். அஷ்டாக்ஷரத்தின் முதல் எழுத்தான ஓம் என்பதன் நடுவில் உள்ள உ என்னும் எழுத்து (ஓம் = அ, உ, ம) – மட்டும் – என்னும் பொருள் அளிக்கிறது – அதாவது, ஜீவன் ஈச்வரனுக்காக மட்டுமே உள்ளான் என்பதும், அவன் மற்றவர்களுக்காக உள்ளான் என்பது மறுக்கப்படவும் செய்கிறது. இந்த மறுப்பானது அன்யயோகவ்யவச்சேதம் எனப்படுகிறது. இத்தகைய சேஷத்வம் பகவான் தொடங்கி அடியார்கள்வரை நீடிப்பதை நாம் வேறு ஓர் இடத்தில் விளக்குவோம்.

## சேதனனின் ப்ரவ்ருத்தி

இப்படியிருக்கிற சேதனருக்குப் ப்ரவ்ருத்தியாவது – பராதீனமுமாய் பரார்த்தமுமான கர்த்ருத்வமும் போக்த்ருத்வமும், ஈச்வரன் தன் போக்த்ருத்வார்த்தமாக இவர்களுக்குக் கர்த்ருத்வ போக்த்ருத்வங்களை உண்டாக்குகையால் இவை பரார்த்தங்கள்.

விளக்கம் – சேதனர்களின் செயல்பாடு என்பது ஈச்வரனின் ஸங்கல்பத்திற்கு ஏற்ப கர்மங்களை இயற்றியபடி இருப்பது, அந்தக் கர்மங்களின் பலன்களை அனுபவிப்பதும் ஆகும். இவ்விதம் அவர்கள் கர்மம் இயற்றுவதும், அவற்றின் பலனை அனுபவிப்பது ஈச்வரனின் ஸங்கல்பம் காரணமாகவே என்பதால், அவர்கள் அவனுக்காகவே உள்ளனர் அன்றி, தங்களுக்காக அல்ல.

## மூன்று வகையான சேதனர்களின் ப்ரவ்ருத்தியும் வேறுபாடுகளும்

பத்தசேதநருக்கு நீங்கியுள்ளாரில் பேதம் அவித்யா கர்ம வாஸநா ருசி ப்ரக்ருதிஸம்பந்த யுக்தராயிருக்கை. இவர்களுக்கு அன்யோன்யம் வரும் ஞானஸுகாதிபேதத்தை ப்ரஹ்மாதி ஸ்தம்ப பர்யந்தகளான வகுப்புகளிலே கண்டு கொள்வது. இப்பத்த சேதநர் தந்தாமுக்குக் கர்மானுரூபமாக ஈச்வரன் அடைத்த சரீரங்களை தர்மிஸ்வரூபத்தாலும் தரியா நிற்பார்கள், தர்மியால் வருகிற தாரணம் சரீரத்தினுடைய ஸத்தைக்குப் ப்ரயோஜனமாயிருக்கும் ஜாக்ரதாத்யவஸ்தையில் தர்மபூதஞானத்தாலே வருகிற சரீரதாரணம் புருஷார்த்த ததுபாயா னுஷ்டானங்களுக்கும், க்ருதோபாயனான பரமைகாந்திக்கு பகவதனுபவ கைங்கர்யங்களுக்கும் உபயுக்தமாயிருக்கும். பாபக்ருத்துக்களுக்கு இச்சரீரதாரணம் விபரீத பலத்துக்கு ஹேதுவாயிருக்கும். இஜ்ஜீவர்கள் இச்சரீரத்தை விட்டால் இதின் ஸங்காதம் குலையுமித்தனை. சரீரத்துக்கு உபாதானமான த்ரவ்யங்கள் ஈச்வரசரீரமாய்க் கொண்டு கிடக்கும். பத்தசேதநருக்கு இதரரிற் காட்டில் ஸ்திதிபேதம் யாவந்மோக்ஷம் அனுவர்த்திக்கை. ப்ரவ்ருத்திபேதம் புண்ய பாப அனுபயரூபங்களான த்ரிவித ப்ரவ்ருத்திகளும்.

விளக்கம் – ஸம்ஸார பந்தம் என்னும் பிடியில் சிக்கியுள்ள சேதனர்களுக்கும் மற்ற சேதனர்களுக்கும் (முக்தர், நித்யர்) உள்ள வேறுபாடு என்னவெனில் – பந்தத்தில் உள்ள சேதனர்கள் அறியாமை, கர்மங்கள், பூர்வ கர்ம வாஸனை, உலக விஷயங்களில் நாட்டம், ப்ரக்ருதியுடன் தொடர்பு என்பதைக் கொண்டுள்ளனர். ப்ரம்மன் தொடங்கி புல்பூண்டு வரை உள்ள ஜீவன்களில் ஞானம், சுக அனுபவங்கள் முதலானவற்றில் வேறுபாடுகளைக் காணலாம். தங்களுடைய கர்மம் காரணமாக ஈச்வரன் தங்களுக்கு அளித்த சரீரத்தை ஆதரித்தபடி இவ்வகை சேதனர்கள் உள்ளனர். தங்கள் சரீரங்களைத் தங்களது ஸ்வரூபம் மூலமாகவோ, தர்மபூதஞானம் மூலமாகவோ தாங்கியபடி உள்ளனர். ஸ்வரூபம் மூலம் தாங்கப்படுவதாலேயே சரீரம் வாழ்கிறது. விழித்திருக்கும் நிலையில் தர்மபூதஞானத்தின் காரணமாக இந்தச் சரீரமானது வாழ்வின் புருஷார்த்தங்களைத் தேட முயற்சி செய்தபடி உள்ளது. அத்தகைய புருஷார்த்தங்களைப் பெற உதவும் முயற்சிகளிலும் ஈடுபடுகிறது. மிகவும் உயர்ந்த பரமைகாந்திகளுக்கு தர்மபூதஞானம் வழியாக, இந்தச் சரீரம் பகவத் அனுபவத்திலும், பகவானின் கைங்கர்யத்திலும் ஈடுபடுத்தப்படுகிறது. பாவம் நிறைந்தவர்களுக்கு இந்தச் சரீரமானது மேலும் பாவம் செய்யக் காரணமாக அமைந்துவிடுகிறது. ஜீவன் இந்த உடலை விடும்போது, இது அழியத் தொடங்குகிறது. சரீரம் உண்டாக முக்கியமான காரணமாக உள்ள பஞ்சபூதங்கள் ஈச்வரனின் சரீரமாக நிலைத்து விடுகின்றன. மற்ற சேதனர்களைக் காட்டிலும், பத்தசேதனர்களின் நீடிப்பு (ஸ்திதி) என்பது, மோக்ஷம் அடையும்வரை, இந்தச் சரீரத்துடன் தொடர்பு கொண்டபடி இருப்பதாகும். இவர்களின் செயல்பாடு (ப்ரவ்ருத்தி) என்பது மூன்று வகை – புண்யம், பாவம், இவை இரண்டும் அற்றது – என்பதாகும்.

முக்தருக்கு நீக்கியுள்ளாரில் பேதம் ப்ரதிபந்தக நிவ்ருத்தியாலே ஆவிர்பூத ஸ்வரூபராயிருக்கை. ஸ்திதிபேதம் பூர்வாவதியுண்டான ஆவிர்பாவத்துக்கு உத்தராவதியன்றிக்கேயிருக்கை. இவர்களுக்கு அன்யோன்யம் ஸ்திதிபேதம் ஆவிர்பாவத்தில் முற்பாடு பிற்பாடுகளால் உண்டான முன்புற்ற ஏற்றச் சுருக்கம். ப்ரவ்ருத்திபேதம் அநாதிகாலம் இழந்து பெற்ற பரிபூர்ண பகவதனுபவஜநித ப்ரீதிகாதிதமான யதாபிமத கைங்கர்ய விசேஷங்கள்.

விளக்கம் – முக்தி பெற்ற ஜீவன்களுக்கும் மற்ற ஜீவன்களுக்கும் உள்ள வேறுபாடு என்னவெனில், முக்தி பெற்ற ஜீவன்கள் தங்களுடைய தடைகளைக் கடந்து, தங்களின் ஸ்வரூபத்தை அடைந்தவர்கள் ஆவர். இவர்களுடைய ஸ்திதி (நீடிப்பு) என்பது இவர்களுக்கு வெளிப்பட்ட ஸ்வரூபமானது முடிவில்லாமல் அப்படியே நிலைப்பது ஆகும். இவர்களுடைய ப்ரவ்ருத்தி (செயல்) என்பது எண்ணற்ற காலமாக இழந்திருந்த, பகவானின் மீது மிகவும் அன்புடன் உள்ள நிலை காரணமாக உண்டாகும் கைங்கர்யத்தை மீண்டும் பெறுதல் என்பதே ஆகும்.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

.........தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# முமுக்ஷுப்படி

## ஸ்ரீ மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்

(பகுதி – 8)

40. ரக்ஷிக்கும்போது பிராட்டி ஸந்நிதி வேண்டுகையாலே, இதிலே ஸ்ரீஸம்பந்தமும் அநுஸந்தேயம்.

அவதாரிகை – அநந்தரம் அர்த்தபலத்தாலே இப்பதத்தில் அநுஸந்திக்கப்படும் ஸ்ரீய:பதித்வத்தை அருளிச்செய்கிறார் ரக்ஷிக்கும்போது என்று தொடங்கி.

விளக்கம் – அடுத்து அகாரத்தின் தாத்பர்யம் காரணமாக அகாரம் மூலம் எம்பெருமான் மஹாலக்ஷ்மியின் நாயகனாகக் கூறப்படுகிறான் என்று அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்யரூபயா ரக்ஷகஸ்ஸர்வஸித்தாந்தே வேதாந்தேபி சகீயதே என்கிறபடியே ரக்ஷகனான ஈஸ்வரன் சேதநரை ரக்ஷிக்கும் தசையில் இவர்களுடைய அபராதங்களைக் கண்டாதல், தன் ஸ்வாதந்த்ர்யத்தாலேயாதல் உபேக்ஷியாமற்செய்கைக்கும் உறுப்பான க்ருபையை ஜநிப்பிக்கும் புருஷகாரபூதையான பிராட்டி ஸந்நிதி அவச்யாபேக்ஷிதமாகையாலே, ரக்ஷகனான அவனைச் சொல்லுகிற இவ்வகாரத்திலே அவனுடைய லக்ஷ்மீ ஸம்பந்தமும் அநுஸந்தேயம் என்கை. லக்ஷ்மி என்னாதே ஸ்ரீ என்றது – ச்ரயத இதி ஸ்ரீ: – என்கிறபடியே அவனை நித்ய ஸேவை பண்ணுகையாலே அவனோடு இவளுக்கு உண்டான அவிநாபாவமும், ஸ்ரீயத இதி ஸ்ரீ: – என்கிறபடியே சேதநருக்கு இவள் நித்ய ஸேவ்யையாயிருக்குமென்னுமதுவும் தோற்றுகைக்காக.

விளக்கம் – லக்ஷ்மி தந்திரம் (28–14) – லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்யரூபயா ரக்ஷகஸ்ஸர்வஸித்தாந்தே வேதாந்தேபி சகீயதே – கருணை என்பதே வடிவமாக உள்ள மஹாலக்ஷ்மியுடன் கூடியவனான ஹ்ருஷீகேசனே அனைத்து ஸித்தாந்தங்களிலும் அனைத்து வேதாந்தங்களிலும் ஸர்வ ரக்ஷகன் என்று கூறப்படுகிறான் – என்றது. எம்பெருமான் ஜீவங்களைக் காப்பாற்றும் சமயத்தில் அவர்களது குற்றங்களைக் கண்டு ஒதுக்கி விடவோ, தனது விருப்பம் காரணமாக அவர்களை ஒதுக்கிவிடவோ வாய்பு உண்டு. இதனைத் தடுத்து, அவனுக்குச் சேதநர்கள் மீது கருணை பிறக்கும்படி சிபாரிசு செய்பவளாக (புருஷகாரம்) பெரியபிராட்டி அவனுடன் இருப்பது அவசியமாகிறது. ஆகவே அனைத்தையும் காப்பவனான எம்பெருமானைக் குறிக்கும் – அ – என்ற பதத்திற்கு, அவனுக்கு மஹலக்ஷ்மியுடன் உள்ள தொடர்பையும் சேர்த்தே கூறவேண்டும். இங்கு லக்ஷ்மி என்ற கூறாமல் ஸ்ரீ என்று ஏன் கூறவேண்டும்? இதற்கு இரு காரணங்கள் உண்டு. ச்ரயத இத் ஸ்ரீ: – இவள் அவனை விட்டு எப்போதும் பிரியாமலிருப்பதாலும், ஸ்ரீயத இதி ஸ்ரீ: – அனைவராலும் தொண்டு செய்யப்பட்டபடி இருப்பதாலும் – ஸ்ரீ என்றார்.

41. அத்ர பகவத்ஸோநாபமதிமிச்ரர் வாக்யம் – அவன் மார்புவிட்டுப் பிரியில் இவ்வக்ஷரம் விட்டுப்பிரிவது.

அவதாரிகை – இன்னமும் இவ்வகாரத்தில் ஈச்வரனுடைய லக்ஷ்மி ஸம்பந்தம் நியமேந தோற்றுமென்னுமத்தை ஆப்தவசநத்தாலே தர்சிப்பிக்கிறார் அத்ர இத்யாதியால்.

விளக்கம் – பகவானுக்கு மஹாலக்ஷ்மியுடன் உள்ள தொடர்பை – அ – என்னும் எழுத்து விளக்குகிறது என்ற கருத்தை ஓர் அறிஞரின் கூற்று மூலம் விளக்குகிறார்.

வ்யாக்யானம் – அதாவது, இவ்விடத்திலே ஜ்ஞாநாதிகரான ஸ்ரீஸேநாபதிசீயர் அருளிச்செய்யும் வார்த்தை – அகலகில்லேனிறையும் என்று அவன் திருமார்பிலே நித்யவாஸம் பண்ணும் இவள், அம்மார்பைவிட்டுப் பிரியிலாயிற்று, அவனுக்கு ப்ரதிபாதகமான இவ்வக்ஷரத்தைவிட்டுப் பிரிவது என்று – என்கை. என்று என்கிற இத்தனையுங் கூட்டாதபோது, கீழோடு இவ்வாக்யம் அந்வயியாது.

விளக்கம் – இங்கு ஸ்ரீ சேநாபதி ஜீயர் என்னும் சிறந்த அறிஞர் அருளிச் செய்தது காணத்தக்கது. அவர் கூறுவது – திருவாய்மொழி (6–10–10) – அகலகில்லேன் இறையும் – என்ற வரியில் கூறியபடி அவனுடைய திருமார்பில் எப்போதும் வாஸம் செய்யும் இவள், அவன் திருமார்பை விட்டு பிரிந்து விட்டால், இவனும் அ என்ற எழுத்திலிருந்து பிரிந்து விடுவான் – என்று கூறினார்.

இத்தால், அவன் திருமார்பில் ஸம்பந்தம் இவளுக்கு நித்யமாகையாலே அவன் தோற்றுமிடத்திலே இவளும் தோற்றுகை நிச்சிதமாகையால், அவன் திருமார்பில் அந்வயத்தோபாதி அவனுக்கு வாசகமன அகாரத்தில் அந்வயமும் இவளுக்கு நித்யமென்றதாயிற்று.

விளக்கம் – இதனால் அவனுடைய திருமார்புடன் இவளுக்கு என்றும் சேர்த்தி உண்டு என்பது உறுதியாகிறது. ஆகவே அவன் எங்கு உள்ளானோ அங்கு அவளும் உள்ளாள். அவனது திருமார்பில் சேர்ந்து உள்ளது போல், அவனை குறிப்பிடும் அ என்ற எழுத்திலும் இவள், அவனுடன் சேர்ந்தே உள்ளாள்.

42. பர்த்தானினுடைய படுக்கையையும் ப்ரஜையினுடைய தொட்டிலையும் விடாதேயிருக்கும் மாதாவைப்போலே ப்ரதம சரமபதங்களை விடாதேயிருக்கும் இருப்பு.

அவதாரிகை – இன்னமும் இவ்வர்த்தத்தை ஸ்திரீகரிக்கைக்காக ஈச்வர சேதந வாசகங்களான அகார மகாரங்களிரண்டிலும் இவளுக்கு உண்டான அநவரதாந்வயத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் பர்த்தாவினுடைய என்று தொடங்கி.

விளக்கம் – இவள் ஸர்வேச்வரனைக் குறிக்கும் அ என்ற எழுத்திலும், ஜீவனைக் குறிக்கும் ம என்ற எழுத்திலும் சேர்ந்து உள்ளாள் என்பதை ஓர் உதாரணம் மூலம் அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, சேஷபூதையான தன் ஸ்வரூபத்துக்குச் சேரும்படி அவனை ரஸிப்பிக்கைக்காக பர்த்தாவினுடைய படுக்கையையும் விடாதே ரக்ஷகையான தன் ஸ்வரூபத்துக்கும் போரும்படி தத்ரக்ஷணம் பண்ணுகைக்காக ப்ரஜையினுடைய தொட்டிலையும் விடாதே இருக்கும் மாதாவானவளைப்போலே, இவளும் பர்த்ருபூதனான ஈச்வரனுக்கு ப்ரதிபாதகமாயிருந்துள்ள ப்ரதமபதமான அகாரத்தையும், ப்ரஜாபூதரான சேதநர்க்கு ப்ரதிபாதகமாயிருந்துள்ள சரமபதமான

மகாரத்தையும் தத்தத் விஷயத்தில் தனக்கு உண்டான ஸம்பந்தத்துக்கு ஈடாக ரஸிப்பிக்கை ரக்ஷிக்கையாகிற இவற்றைப்பற்ற, விடாதேயிருக்குமிருப்பு – என்கை.

விளக்கம் – கணவனுக்குத் தனது ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி தொண்டு செய்யும் மனைவி, அவனுக்கு இன்பம் அளிப்பதற்காக அவனுடைய படுக்கையை விடுவதில்லை. அதே நேரத்தில் குழந்தையைக் காப்பாற்றும் தன்னுடைய தாய் என்னும் ஸ்வரூபத்தையும் கைவிடாமல் குழந்தையின் தொட்டிலையும் விடாமல் உள்ளாள். இதே போன்று பெரியபிராட்டி தனது நாயகனான ஸர்வேச்வரனைக் கூறும் அ என்ற எழுத்தையும், தனது குழந்தைகளான சேதநர்களைக் குறிப்பிடும் ம என்ற எழுத்தையும் விடாமல் உள்ளாள். அ என்பதன் மூலம் எம்பெருமானை அனுபவிப்பதற்காகவும், ம என்பதன் மூலம் ஜீவனைக் காப்பதற்காகவும் விடாமல் இருக்கிறாள்.

43. ஸ்ரீநந்தகோபரையும் கிருஷ்ணனையும் விடாத யசோதைப்பிராட்டியைப்போலே.

அவதாரிகை – கீழ்ச்சொன்ன த்ருஷ்டாந்தத்தை ஒரு விசேஷ நிஷ்டமாக்கி அருளிச்செய்கிறார் ஸ்ரீநந்தகோபரையும் கிருஷ்ணனையும் விடாத என்று தொடங்கி.

விளக்கம் – மேலே கூறிய உதாரணத்தை ஒரு சிறப்பு விஷயம் கூறி விளக்குகிறார்.

வ்யாக்யானம் – அதாவது, பார்யையான தன் ஸ்வரூபானுகுணமாக ரஸிப்பிக்கைக்காக பர்த்தாவான ஸ்ரீநந்தகோபரையும் விடாதே, மாதாவான தன் ஸ்வரூபானுகுணமாக ரக்ஷிக்கைக்காகப் புத்ரனான க்ருஷ்ணனையும் விடாதே. அம்பரமே என்கிற பாட்டிற் சொல்லுகிறபடியே மத்யேவர்த்திக்கும் யசோதைப்பிராட்டியைப்போலே ப்ரதம சரமபத வாச்யரான ஈச்வர சேதநர்களிருவரையும் விடாதே இவளும் வர்த்திக்கும்படி என்கை.

விளக்கம் – மனைவியான தன்னுடைய ஸ்வருபத்திற்கு ஏற்றபடி தன்னை அனுபவிப்பதற்காக தன்னுடைய கணவனான ஸ்ரீநந்தகோபரையும், தாயான தனது ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி காப்பதற்காகத் தன்னுடைய புத்திரனான கண்ணனையும் யசோதை விடாமல் உள்ளாள். திருப்பாவையில் – அம்பரமே (17) என்ற பாசுரத்தில் கூறியபடி நடுவில் உள்ள யசோதை போன்று முதலாவது, மூன்றாவது ஆகிய எழுத்துக்களால் கூறப்படும் ஈச்வரனையும், சேதநர்களையும் இவள் விடாமல் உள்ளாள்.

44. ஒருவனடிமைகொள்ளும்போது க்ருஹிணிக்கென்றன்றே ஆவணவோலை யெழுதுவது, ஆகிலும், பணிசெய்வது க்ருஹிணிக்கிறே. அது போலே நாம் பிராட்டி அடிமையாயிருக்கும்படி.

அவதாரிகை – ஈச்வரசேஷத்வமாத்ரமொழியப் பிராட்டிக்கும் சேஷமென்னுமிடம் இவ்வாசகத்தில் இன்றிக்கேயிருக்கச்செய்தேயும், இவளுக்கும் சேஷம் என்று நாம் கொள்ளுகிறபடி எங்ஙனே? என்ன, அருளிச்செய்கிறார் ஒருவன் என்று தொடங்கி.

விளக்கம் – அ என்ற எழுத்தானது ஜீவன் ஈச்வரனுக்கு மட்டுமே அடிமைப்பட்டவன் என்பதைக் கூறுகிறதே தவிர பெரியபிராட்டிக்கும் அடிமைப்பட்டவன் என்று கூறவில்லையே. ஆனால் நாம் அவளுக்கும் அடிமை என்றே கொள்ளுகிறோம். இது எப்படி? விடை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, லோகத்திலே ஒருவன் தாஸதாஸிகள் முதலானதோரடிமையைக் கொள்ளும்போது தனக்கென்றே எழுதிக் கொள்ளுமதொழிய, தன் க்ருஹிணிக்கென்றன்று விலையோலை எழுதிக்கொள்வது, ஆயிருக்கச்செய்தேயும், அடிமைத் தொழில் செய்வது க்ருஹிணிக்கிறே, அதுபோலே ஈச்வரசேஷம் என்னும் அளவை இவ்வகாரம் சொல்லிற்றேயாகிலும், நாம் பிராட்டிகு அடிமையாயிருக்கும்படி என்கை.

விளக்கம் – இந்த உலகில் ஒருவன் வேலைக்காரர்களையும், வேலைக்காரிகளையும் சேர்த்துக் கொள்கிறான் என்று வைப்போம். அந்தப் பத்திரத்தில் அவன், இவர்கள் அனைவரும் தன்னுடைய அடிமைகள் என்று மட்டுமே எழுதிக் கொள்வான். தன்னுடைய மனைவிக்கும் இவர்கள் அடிமை என்று எழுதுவதில்லை. ஆயினும்

வேலையாட்கள் அவனது மனைவிக்காகவே அதிக தொண்டு செய்வர். இது போன்று அ என்ற பதம் மூலம் ஜீவன் ஈச்வரனுக்கு அடிமை என்று கூறப்பட்டாலும், நாம் பெரியபிராட்டிக்கும் அடிமையே.

ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த

# சிறிய திருமடல்

(பகுதி – 8)

(வயிறடித்து) – வெண்ணெயிழந்தேன் என்று வயிறடிக்கிறாளன்றிறே, இது இவனுக்கு ஸஹியாதொழிகிறதோ என்னும் வயிறெரித்தலாலேயாதல், இன்று வெண்ணெயாகிறது, நாளை பெண்களாகிறது, இது என்னாய் முடிகிறதோ என்றாதல். (இங்காரார் புகுதுவார்) – லங்கைபோலேயிறே வெண்ணெயை அரண் செய்து வைத்தபடி. (ஐயரிவரல்லால்) – முதலியாரேயிறே இது செய்வார். (நீராம் இது செய்தீரென்று) – உம்முடைய கைவழியே போனவித்தனையிறே வெண்ணெய், வேறு சிலருண்டோ என்று கையைப் பிடித்து உறங்குகிறவனைத் தூக்கி எடுத்து.

விளக்கம் – (வயிறடித்து) – வெண்ணெய் பறிபோனது என்பதால் இவள் புலம்பவில்லை. இத்தனை வெண்ணெய் உண்டால் இவனது இளம்வயிற்றுக்கு ஒத்துக்கொள்ளுமா என்ற எண்ணத்தால் புலம்பினாள். இன்று வெண்ணெயை எடுத்தான், நாளை பெண்களை அபகரிப்பான், இது இங்கு சென்று முடியப்போகிறதோ என்று எண்ணிப் புலம்பினாள். (இங்காரார் புகுதுவார்) – எவராலும் புக முடியாத காவலுடன் கூடிய இலங்கை போன்று அல்லவா வெண்ணெயை இவள் பாதுகாப்பாக வைத்தாள்? (ஐயர் இவர் அல்லால்) – இந்தச் செயலை உயர்ந்தவனான இவனை விட்டால் இங்கு வந்து வேறு யார் செய்யப் போகின்றனர்? (நீராம் இது செய்தீரென்று) – உறங்குவது போல் பாசாங்கு செய்து கொண்டிருந்த கண்ணனின் கையைப் பிடித்துத் தூக்கி – உனது இந்தக் கை வழியாகத்தானே வெண்ணெய் களவு போனது? இதனை நீ மட்டும் செய்தாயா அல்லது துணைக்கு வேறு யாரும் வந்தனரா – என்றாள்.

(ஓர் நெடுங்கயிற்றால்) – வெண்ணெய் களவுகாண்பானாகவும், தான் இவனை அடிப்பாளாகவும் முன்பே கயிறு தேடி வைத்திலளிறே, கைக்கெட்டிற்றொரு கயிற்றாலே. (நெடுங்கயிற்றால்) – வ்யாக்யானம் பண்ணுமவர்கள் கண்ணிக் குறுங்கயிறு என்றார்களிறே. நெடுமை விபரீதலக்ஷணை. அன்றியே, இவன் திருமேனியோட்டை ஸ்பர்சத்தாலே நெடுங்கயிறு என்றாளாதல். திருமேனி நீ தீண்ட பெற்று, மாலும் கருங்கடலே என்நோற்றாய் என்னக்கடவதிறே. (ஊரார்களெல்லாருங்காண) – வெண்ணெய் களவு கொடுத்தாரும், பெண்களவு கொடுத்தாரும் காண. எல்லாரும் காண மடலெடுக்க இருந்தாளிவள், நான் அது உபதேசிக்கவிருந்தேன், எங்களையொழிய அடைய ஸர்வஸ்வதாநத்தே அகப்பட்டது காணும். அதாவது– காணலுமாய்த் தவிரலுமாயிருக்கும் மனிச்சர்காணும் கண்டது. காணுமளவும் மடலெடுத்தல்லது தரிக்கமாட்டாத நாங்கள் காணப்பெற்றிலோம்.

விளக்கம் – (ஓர் நெடுங்கயிற்றால்) – இவன் வெண்ணெயைத் திருடப்போகிறான், நாம் இவனை அடிக்கப் போகிறோம் என்று முன்னமே எதிர்பார்த்து யசோதை கயிறு எதனையும் தயாராகத் தேடி வைக்கவில்லை. எனவே கையில் அகப்பட்ட கயிறு ஒன்றை எடுத்தாள். (நெடுங்கயிற்றால்) – இங்கு பெரிய திருமொழியில் (11–5–5) – கண்ணிக் குருங்கயிறு – என்று சிறிய கயிறாக கூறிவிட்டு, இவரே நீண்டகயிறு என்றும் கூறுவது காண்க. அல்லது முதல் திருவந்தாதியில் (19) – திருமேனி நீ தீண்டப் பெற்று மாலும் கருங்கடலே என் நோற்றாய் – என்று எம்பெருமானின் திருமேனியுடன் சேர்த்தி ஏற்பட்டதால் கடலுக்கு மேன்மை உண்டானது – என்று கூறுவது போல், கண்ணனின் திருமேனியொடு பட்டதால் அந்தக் கயிறுக்குப் பெருமை அதிகமானது. இதனை விளக்கவே நெடுங்கயிறு என்றார் என்றும் கூறலாம். (ஊரார்கள் எல்லோரும் காண) – கண்ணனிடம் வெண்ணெயைக் களவு

கொடுத்தவர்கள், அவனிடம் தங்கள் வீட்டுப் பெண்களை இழந்தவர்கள் என்று பலரும் காணும்படி. எல்லாரும் காணும்படி அவன் கட்டுண்டான், இவள் எல்லாரும் பார்க்கும்படியாக மடல் எடுத்தாள், கட்டுவிச்சியாக நான் உங்களுக்கு அதனை விளக்கியபடி இருந்தேன். ஆக எங்களைத் தவிர அனைவரும் அவனது குணங்களையும் அழகையும் பருகினர். அவனைக் கண்டாலும் காணாவிட்டாலும் ஒரே போன்று இருப்பவர்கள் அவனைக் கண்டார்கள். ஆனால் அவனைக் காணாமல் உயிர் தாங்கமாட்டோம் என்று மடல் எடுத்த எங்களால் அவனைக் காண இயலவில்லை.

(உரலோடே) – இவனிருந்தவிடத்தே உரலை உருட்டாதே, உரலிருந்தவிடத்தே இவனை இழுத்துக் கொண்டு போனாள். (தீரா வெகுளியளாய்) – இவன் பக்கல் ப்ரேமத்துக்கு அவதியுண்டாகிலிறே, சீற்றத்துக்கு அவதியுண்டாவது. (சிக்கென ஆர்த்தடிப்ப) – சிக்கெனக் கட்டுவதும் செய்தாள், சிக்கென அடிப்பதும் செய்தாள். (ஆரா வயிற்றினோடாற்றாதான்) – இவன் செய்ததென்னென்னில் பெரிய திருநாளிலே சிறைப்பட்டிருப்பாரைப்போலே, வெண்ணெயும் பெண்களும் ஆழமோழையாய்ச் செல்லுகிற அமளியிலே நாம் புகுந்திருப்பதே என்றிருந்தான். (ஆற்றாதான்) – ஆற்றமாட்டாதேயிருந்தான். என்னியவென்னில, எங்கே வெண்ணெயை ஒளிக்கிறார்கள், எங்கே பெண்ணை ஒளிக்கிறார்களென்று.

விளக்கம் – (உரலோடே) – இவன் உள்ள இடத்திற்கு உரலைக் கொண்டு வராமல், உரல் இருந்த இடத்திற்கு இவன் திருமேனி நோகும்படி இழுத்துக் கொண்டு போனாள். (தீரா வெகுளியளாய்) – இவன் மீது உள்ள அன்பு காரணமாக யசோதைக்கு இந்தக் கோபம் வந்தது. அந்த அன்பு அதிகமாக உள்ளதால், கோபமும் அதிகமாக உள்ளது. (சிக்கென ஆர்த்தடிப்ப) – சட்டென்று அவனைப் பிடித்து உரலில் கட்டினாள், கயிற்றால் அடிக்கவும் செய்தாள். (ஆரா வயிற்றினோடாற்றாதான்) – அப்போது இவன் என்னசெய்தான்? அரங்கனின் பெரியகோவிலில் வைகுண்ட ஏகாதசி உற்சவம் நடக்கும்போது ஏதோ சில காரணத்தால் வர இயலாமல் தங்கள் ஊரிலேயே இருக்க நேர்ந்தவர்கள் வருந்துவார்கள். அது போன்று இவன் – வெண்ணெயும் பெண்களும் வெள்ளம் போன்று ஆங்காங்கு ஓடும்போது, நாம் இங்கு இப்படிச் சிறை பட்டோமே – என்று நொந்து கொண்டான். (ஆற்றாதான்) – பொறுக்க மாட்டாமல் தவித்தான், எதற்கு என்றால் – வெண்ணெயையும் பெண்களையும் நாம் அறியாமல் எங்கே ஒளித்து வைப்பார்களோ என்று சிந்தித்தான்.

(அன்றியும்) – அதுக்கு மேலே பிறந்ததோரபாயம் கேட்கலாகாதோ? ஸ்நேஹிநியான யசோதைப் பிராட்டி கையாலே கட்டுண்டு அடியுண்ட அடியிறே கீழ்ச் சொல்லிற்று, ப்ரதிகூலனான காளியனாலே கட்டுண்டபடி சொல்லுகிறது மேல். நியாமிகையுமாய், ஸ்நேஹிநியுமான அவள் கையாலே கட்டுண்டது பாடாற்றலாமிறே. காளியன் செய்த செயலைக்கேளீர்.

விளக்கம் – (அன்றியும்) – இதற்கும் மேல் அவனுக்கு உண்டான ஆபத்தைக் கேட்க வேண்டுமே. தன் மீது அன்பு கொண்ட யசோதையின் கையால் கட்டுண்டு, அடிப்பட்டு நின்றது கூறப்பட்டது. இனி தன்னுடைய விரோதியான காளியனால் கட்டுண்ட நிலை கூறப்படுகிறது. இவள் அவனது தாயானதால், அவன் மீது உரிமை உள்ளதால், அவள் கையால் கட்டுண்டதைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் காளியன் செய்ததைக் கேளுங்கள்.

திருமங்கை ஆழ்வார் திருவடிகளே சரணம்

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

நம்பெருமாள் திருவடிகளே தஞ்சம்

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

## திருப்பாணாழ்வார் அருளிச் செய்த

# அமலனாதிபிரான்
(பகுதி – 8)

6. துண்ட வெண்பிறையன் துயர் தீர்த்தவன் அம் சிறைய
வண்டு வாழ் பொழில்சூழ் அரங்கநகர் மேய அப்பன்
அண்டர் அண்ட பகிரண்டத் தொருமாநிலம் எழுமால் வரை முற்றும்
உண்ட கண்டம் கண்டீர் அடியேனை உய்யக்கொண்டதே.

பொருள் – ஒரு சிறிய துண்டாக உள்ளதும், வெண்மையாக உள்ளதும் ஆகிய பிறைச்சந்த்ரனைத் தனது தலையில் கொண்ட சிவனுடைய சாபம் என்னும் பாவம் நீங்கும்படிச் செய்தவன், அழகான சிறகுகளை உடைய வண்டுகள் பொருந்தி வாழும்படியாக உள்ள சோலைகளால் சூழப்பட்ட திருவரங்கத்தில் எப்போதும் வாஸம் செய்பவன், இந்த அண்டம், அண்டத்தில் உள்ள சேதநர்கள், மற்ற அண்டங்கள், பரந்த பூமி, ஏழு மாமலைகள், என்னும் கூறப்படாத பலவற்றையும் ப்ரளய காலத்தில் அமுது செய்தவன் – இப்படிப்பட்ட பெரியபெருமாளின் திருக்கழுத்து என்னை உய்யும்படிச் செய்தது.

அவதாரிகை – ஸர்வலோகத்தையும் அமுது செய்தருளின கண்டத்தினழகு என்னையுண்டாக்கிற்றென்கிறார். திருமார்பினழகு திருக்கழுத்திலே ஏறிட்டதென்னவுமாம்.

பொருள் – அனைத்து உலகங்களையும் ப்ரளயத்தின்போது உண்டு, தனது திருவயிற்றில் வைத்துக் காப்பாற்றிய பெரியபெருமாளுடைய திருக்கழுத்தின் அழகு தன்னை உண்டாக்கியது என்றார். கடந்த பாசுரத்தில் இவர் அனுபவித்த திருமார்பின் அழகானது, இவரைத் தள்ளிக்கொண்டுபோய், திருக்கழுத்தில் நிறுத்தியது எனலாம்.

வ்யாக்யானம்

(துண்டமித்யாதி) – கலாமாத்ரமாய் வெளுத்திருந்துள்ள பிறையை ஜடையிலேயுடையனான ருத்ரன் தனக்குப் பிதாவுமாய் லோககுருவுமாயிருந்துள்ள ப்ரஹ்மாவினுடைய தலையையறுக்கையால் வந்த பாபத்தைப் போக்கினவன். சுமையராயிருப்பார் சும்மாட்டுக்குள்ளே தாழைமடலைச் சொருகுமாபோலே, ஸாதகனாயிருக்கச்செய்தே ஸ்வப்ரதாநனாக அபிமானித்திருக்குமாய்த்து. ஆனாலும் ஆபத்து வந்தால் அவனல்லது புகலில்லையே. சந்த்ரனுடைய க்ஷயத்தைப் போக்கினானென்றுமாம். அவனுடைய துரிதத்தைப் போக்கினாப்போலே தம்முடைய துரிதத்தையும் போக்குமென்று கருத்து.

விளக்கம் – (துண்டம்) – முழுமையாக இல்லாமல் ஒரு துண்டாக மட்டுமே உள்ளதும், வெளுத்திருப்பதும் ஆகிய சந்த்ரனைத் தனது தலையில் உள்ள சடைமுடியில் கொண்டவன் சிவபெருமான் ஆவான். அவன், தனது தந்தையும், இந்த உலகம் அனைத்தையும் படைத்தவனும் ஆகிய ப்ரம்மனின் தலையை அறுத்ததால் ப்ரஹ்மஹத்தி தோஷம் அடைந்தான். இவனது இந்தப் பாபத்தை நீக்கியவன் பெரியபெருமாள் ஆவான். தலையில் பெரும் சுமையைச் சுமந்து செல்பவர்கள், அழகுக்காக அந்தச் சுமையின் அடியிலும் தாழம்பூவைச் சொருகி வைத்திருப்பார்கள். இதுபோன்று சிவபெருமான், தான் எம்பெருமானைக் குறித்து

எப்போதும் தவம் செய்பவன் என்று காட்டிக்கொண்டாலும், இன்பத்தில் விருப்பம் உள்ளவன் என்ற நிலை வெளிப்படும்விதமாகத் தலையில் சந்த்ரனைச் சூட்டியுள்ளான் என்று கருத்து. இப்படி இருந்தாலும் அவனுக்கு ஓர் ஆபத்து வந்தபோது, பெரியபெருமாளை அல்லாமல் புகலிடம் வேறு ஏதும் அகப்படவில்லையே. சந்த்ரனுக்கு உண்டான பாபத்தையும் பெரியபெருமாள் நீக்கினான். ஆக இவர்களுடைய பாவங்களை நீக்கியது போன்று, தனது பாவங்களையும் நீக்குவான் என்று கருத்து.

(அஞ்சிறைய வண்டு வாழ்பொழில்சூழ் அரங்கநகர் மேயவப்பன்) – லோகத்தில் ப்ரதாநரானவர்கள் ப்ரஹ்மஹத்யையைப் பண்ணி அலைந்து கொடுகிடக்கப்புக்கவாறே தான் கடக்க நிற்கவொண்ணாதென்று இவர்களுடைய ரக்ஷணார்த்தமாகக் கிட்டவந்து கண்வளர்ந்தருளுகிற உபகாரகன். அழகிய சிறகை உடைத்தான வண்டுகள் வாழா நின்ற சோலை சூழ்ந்த பெரியகோயிலிலே கண்வளர்ந்தருளுகிற பிதாவானவன்.

விளக்கம் – (அஞ்சிறைய வண்டு வாழ்பொழில்சூழ் அரங்கநகர் மேயவப்பன்) – இந்த உலகில் மிகவும் முக்கியஸ்தர்களில் சிவபெருமான் போன்று ப்ரஹ்மஹத்தி தோஷம் கொண்டு அலைவதைக் கண்டான். அவர்களைக் காக்க, அவர்கள் வர இயலாத பரமபதத்தில் தான் இருக்கக்கூடாது, அவ்விதம் நாம் இருந்தால் அவர்களின் பாபம் நீங்காது என்று சிந்தித்தான். ஆகவே இவர்களைப் போன்றவர்களைக் காப்பாற்றும் பொருட்டு, திருவரங்கத்தில் வந்து சயனித்தான். அழகான சிறகுகள் கொண்ட வண்டுகள் கூட்டமாக அமர்ந்துள்ள சோலைகள், இந்தச் சோலைகளால் சூழப்பட்ட திருவரங்கம், இத்தகைய பெரியகோயிலில் கண்வளர்பவனும், அனைவருக்கும் தந்தையும் ஆனவன்.

(வண்டுவாழ்பொழில்) – வண்டுகள் அவன் பக்கல் செல்லாது, திருச்சோலையின் யோக்யதையிலே இளமணல் பாய்ந்து கால்வாங்கமாட்டாதே நிற்கும். அவ்வண்டுகளைப்போலே தம்மையனுபவிப்பித்து விடாய் கெடுத்தானென்கிறார்.

விளக்கம் – (வண்டுவாழ்பொழில்) – வண்டுகள் பெரியபெருமாள் உள்ள இடம்வரை செல்லாமல், சோலைகளின் அழகில் மயங்கி, ஆற்றின் புதைமணலில் கால்கள் சிக்குண்டவர்கள் நகர இயலாமல் இருப்பது போன்று, அங்கேயே இருந்தன. அந்த வண்டுகள் போன்று தன்னை அவன் பக்கம் நிலைநிறுத்தி, அவன் மீது ஈடுபாடு கொள்ளும்படிச் செய்தான். இதன் மூலம் தனது விருப்பத்தை நிறைவேற்றிக்கொண்டான் என்றார்.

(அண்டரண்டமித்யாதி) – அண்டாந்தர்வர்த்திகளுடைய அண்டம். பகிரண்டம் – புறவண்டம். அத்விதீயமான மஹாப்ருதிவி. பூமிக்கு ஆணியடித்தாப் போலேயிருக்கிற ஏழுவகைப்பட்ட குலகிரிகள். ஒன்றொழியாமே ஆடிக்காற்றில் பூளைபோலே பறந்து திருவயிற்றிலே புகும்படியுண்ட கழுத்துக்கிடீர். இவற்றைத் தனித்தனியே சொல்லுவானென்னென்னில் – தனியே சொல்லுகை போக்யமாயிருக்கையாலே. பெரியபெருமாள் திருக்கழுத்தைக் கண்டால் ப்ரளயாபத்திலே ஜகத்தை எடுத்துத் திருவயிற்றிலே வைத்தமை தோற்றா நின்றதாய்த்து. விடுகாது தோடிட்டு வளர்ந்ததென்று தெரியுமாபோலே.

விளக்கம் – (அண்டரண்ட) – அண்டத்தின் உள்ளே இருப்பவர்கள் வாழ்கின்ற ப்ரம்மாண்டம். பகிரண்டம் என்றால் அண்டத்திற்கு வெளியில் உள்ள பரந்த இடம். பூமியானது பறந்து விடாமல் இருப்பதற்கு அடித்து வைத்த ஆணிகள் போன்ற ஏழு மலைகள். இவை அனைத்தும், ஆடிக்காற்றில் அடித்துச் செல்லப்படும் பஞ்சுக்குவியல் போன்று, ப்ரளய காலத்தில் இவனது திருவயிற்றினுள் புகும்படியாக இவனது அழகான கழுத்து அல்லவோ அவற்றை உண்டது? இவற்றை ஏன் தனித்தனியாகக் கூறினார்? அப்போதுதான் மிகவும் இனிமையாக இருக்கும் என்பதால் ஆகும். பெரியபெருமாளின் அழகான கழுத்தைக் காணும்போது, ப்ரளய காலத்தில் அனைத்து உலகங்களையும் உண்டு, தனது திருவயிற்றில் வைத்துக் காப்பாற்றிய நிகழ்வு இவருக்கு நினைவில் வருகிறது. துளையுடன் உள்ள காதைக் காணும்போது, தோடு அணிந்ததால் வளர்ந்ததோ என்று தோன்றுகிறது.

(அடியேனை உய்யக்கொண்டதே) – முன்பு பெற்ற கைங்கர்யத்துக்கு விச்சேதம் பிறவாதபடி நோக்கிற்று. என்னை ஸம்ஸாரத்தில் ஒரு நாளும் அகப்படாதபடி பண்ணிற்று.

விளக்கம் – (அடியேனை உய்யக்கொண்டதே) – முன்பு இவர் பெற்ற கைங்கர்யம் தடை இன்றி தொடர இவன் காப்பாற்றினான். இந்த உலக வாழ்க்கையில் நான் ஈடுபட்டு, சிக்குண்டு விடாதபடி காப்பாற்றினான்.

இப்பாட்டால் ஆபத்ஸகனான ஸர்வேச்வரன்படியும் இங்கே உண்டென்கிறார்.

விளக்கம் – இந்தப் பாசுரம் மூலம், உலகம் அனைத்தையும் காப்பாற்றிய ஈச்வரத்தன்மை பெரியபெருமாளிடம் உண்டு என்றார்.

7. கையின் ஆர் சுரி சங்கு அனல் ஆழியர் நீள்வரைபோல்
மெய்யனார் துளப விரையார் கமழ் நீண்முடி எம்
ஐயனார் அணி அரங்கனார் அரவின் அணைமிசை மேய மாயனார்
செய்யவாய் ஐயோ என்னைச் சிந்தை கவர்ந்ததுவே.

பொருள் – அழகான திருக்கரங்களில் பொருந்தியுள்ள திருச்சங்கு மற்றும் அனல் வீசும் சக்கரம் ஆகியவற்றைக் கொண்டவனும், மிகவும் பெரிய மலை போன்ற திருமேனி உடையவனும், திருத்துழாய் எப்போதும் சூழ்ந்துள்ளதால், அதன் நறுமணம் வீசியபடி உள்ள திருமுடி கொண்டவனும், என்னுடைய ஸ்வாமியாக உள்ளவனும், இந்த உலகின் ஆபரணமாக உள்ள திருவரங்கத்தில் கண்வளர்பவனும், ஆதிசேஷன் மீது இனிமையாக பொருந்தியுள்ளவனும், வியப்பான செயல்கள் செய்பவனும் ஆகிய பெரியபெருமாளின் சிவந்த திருப்பவளம் எனது சிந்தையைக் கவர்ந்து கொண்டது.

அவதாரிகை – திருவதரத்திலே அகப்பட்டபடி சொல்லுகிறார். நீஞ்சப்புக்குத் தெப்பத்தையிழந்தேனென்னுமாபோலே.

விளக்கம் – பெரியபெருமாளின் திருவாய் அழகிலே தான் சிக்குண்டு நின்றதைக் கூறுகிறார். ஆற்றைக் கடக்க முனையும் ஒருவன், பாதி ஆற்றில் தான் வந்த படகை இழந்து நிற்பது போல – அவனை அனுபவிக்கப் புகுந்த இவர், பாதிவரை அனுபவித்துவிட்டு, இப்போது தன்னுடைய மனதைப் பறி கொடுத்து நின்றேன் என்றார்.

வ்யாக்யானம் – (கையினாரித்யாதி) – வெறும்புறத்திலே படவடிக்கவல்ல கையிலே அழகு நிறைந்த சுரியையுடைத்தான ஸ்ரீபாஞ்சஜந்யம், ப்ரதிபக்ஷத்தின் மேலே அனலையுமிழா நின்றுள்ள திருவாழி, இவற்றையுடையராயிருக்கை. ஸ்ரீபாஞ்சஜந்யத்துக்குச் சுரி ஸ்வபாவமானாப்போலே திருவாழியாழ்வானுக்கும் ப்ரதிபக்ஷத்தின்மேலே அனலுமிழ்கை ஸ்வபாவம். திருக்கோட்டியூரிலே அனந்தாழ்வான் பட்டரை – ஸ்ரீவைகுண்டநாதன் த்விபுஜனோ, சதுர்ப்புஜனோ – என்ன, இருபடிகளுமடுக்குமென்ன, இரண்டிலுமழகிதேதென்ன, த்விபுஜனாகில் பெரியபெருமாளைப் போலே இருக்கிறது, சதுர்ப்புஜனாகில் நம்பெருமாளைப் போலே இருக்கிறது – என்றார்.

விளக்கம் – (கையினார்) – பெரியபெருமாளின் திருக்கரத்தை வெறுமனே கண்டாலே, அதன் அழகில் மயங்கி விழுவார்கள். இப்படிப்பட்ட திருக்கரத்தில் மிகவும் அழகும், அழகான ரேகைகளும் உடையதான பாஞ்சஜன்யம் என்னும் சங்கை வைத்துள்ளான். அடியார்களின் விரோதிகள் மீது நெருப்பைக் கக்கும் சக்கரத்தையும் வைத்துள்ளான். சங்கிற்கு ரேகைகள் இயல்பாக உள்ளது போன்று, சக்கரத்திற்கு நெருப்பு கக்குதல் இயல்பாக உள்ளது. திருக்கோட்டியூரில் அனந்தாழ்வான் என்பவர் பராசரபட்டரிடம் – ஸ்ரீவைகுண்டநாதன் இரண்டு திருகரங்களுடன் உள்ளானா அல்லது நான்கு திருக்கரங்களுடன் உள்ளானா – என்று கேட்டார். அதற்கு பட்டர் – இரண்டு விதமாகவும் உள்ளது அவனுக்கு ஏற்றதே, இரண்டிலும் அழகாகவே உள்ளான், இரண்டு திருகரங்களுடன் உள்ளபோது பெரியபெருமாள் போன்று இருப்பான், நான்கு திருகரங்களுடன் உள்ளபோது நம்பெருமாளைப் போன்று இருப்பான் – என்றார்.

(நீள்வரை) – மலையைக் கடலை ஒப்பாகச் சொல்லுமித்தைனையிறே. நீட்சிபோக்யதாப்ரகர்ஷம். பச்சைமாமலைபோல் மேனி, அதுக்கு மேலே ஒப்பனையழகு.

விளக்கம் – (நீள்வரை) – பெரியபெருமாளின் திருமேனிக்கு கடல் அல்லது மலையை மட்டுமே உவமையாகக் கூற இயலும். நீள் என்னும் சொல்லானது இனிமையாக உள்ளது என்று உணர்த்துகிறது. தொண்டரடிப்பொடியாழ்வார், திருமாலையில் – பச்சைமாமலை போல் மேனி – என்றார் அல்லவா? இவனுடைய திருமேனியே அழகு, அந்த அழகுக்கு அழகு சேர்ப்பது போன்று ஆபரணங்கள் உள்ளன.

(துளபவிரையார் கமழ்நீண்முடி) – பரிமளம் மிக்கிருந்துள்ள திருத்துழாய் மாலையாலே அலங்க்ருதமாய் ஆதிராஜ்ய ஸூசகமான திருவபிஷேகத்தை உடையருமாய். (எம்மையனார்) – உறவு தோற்றுகை, எனக்கு ஜனகரானவர்.

விளக்கம் (துளபவிரையார்) – மிகுந்த நறுமணத்துடன் கூடிய துளசியால் பெரியபெருமாளின் திருமேனி அலங்கரிக்கப்பட்டுள்ளது. அத்தகைய க்ரீடம் இவனை, அனைத்து தேவதைகளுக்கும் மேலானவன் என்பதை உணர்த்தியபடி உள்ளது. (எம் ஐயனார்) – இவனைக் காணும்போதே, இவனே என் தந்தை என்னும் உறவுமுறை கண்முன்னே நிற்கிறது.

(அணியரங்கனார்) – ப்ராப்த விஷயமாயிருக்கக் கடக்கவிராதே ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான கோயிலிலே வந்து அண்ணியருமாயிருக்கிறபடி.

விளக்கம் – (அணியரங்கனார்) – ஸம்ஸார கடலாக உள்ள பூமிக்கு ஆபரணமாக உள்ள திருவரங்கத்தில் வந்து நமது அருகாமையில், நம்மை விட்டு அகலாமல் சயனிப்பவன்.

(அரவினணைமிசை) – ரத்னங்களையெல்லாம் தங்கத்திலே புதைத்துக் காட்டுமாபோலே தன்னழகு தெரியத் திருவனந்தாழ்வான் மேலே சாய்ந்து காட்டுகிறபடி. (மேயமாயனார்) – மின்மினி பறக்கிறபடி. ஸ மயா போதித: ஸ்ரீமாந் – எல்லார்க்கும் ஒன்றிலே சாய்ந்தவாறே பொல்லாங்குகள் தெரியும், இங்கு பழையவழகுகளும் நிறம் பெறும்.

விளக்கம் – (அரவின் அணை மிசை) – இரத்தினக்கற்கள் பல தங்கத்தில் பதிக்கப்பட்டால் அதன் அழகு கூடுவது போன்று, தனது திருமேனியின் அழகு அனைவருக்கும் புலப்படும்படி ஆதிசேஷன் மீது சயனித்துள்ளவன். (மேயமாயனார்) – இவனது திருமேனியைக் கண்டால், கண்களில் மின்மினி பறப்பது போன்று உள்ளது. இராமாயணத்தில் – ஸ மயா போதித: – என்னால் கண்வளர்ந்தவன் – என்று கூறுவது போல், உறங்கும்போது இவன் அழகாக உள்ளான். ஒருவருக்கு அவரது விகாரம் அனைத்தும், அவர் உறங்கும்போது மட்டுமே வெளிப்படும். இவனுக்கு, சயனிக்கும்போது கூடுதலாக அழகு வெளிப்படுகிறது.

(செய்யவாய்) – ஸ்த்ரீகளுடைய பொய்ச்சிரிப்பிலே துவக்குண்டார்க்கு இச்சிரிப்புக் கண்டால் பொறுக்கவொண்ணுமோ.

விளக்கம் – (செய்யவாய்) – பெண்களின் பொய்யான சிரிப்பைக் கண்டு மயங்கியவன் நான். இப்படிப்பட்ட என்னை இவனது மெய்யான புன்னகை ஈர்த்துக்கொண்டதை வியப்பாகக் கூறவும் வேண்டுமா?

(ஐயோ) – திருவதரமும் சிவப்பும் அனுபவிக்க அரிதாய் ஐயோ என்கிறார். (என்னை) – பண்டே நெஞ்சு பறிகொடுத்த என்னை அந்யாயம் செய்வதே என்று கூப்பிடுகிறார். (என்னை) – கல்லை நீராக்கி, நீரையும் தானே கொண்டது.

விளக்கம் – (ஐயோ) – திருவாயின் அழகு, அதன் சிவப்பு ஆகியவற்றை அனுபவித்து முடிக்க இயலாமையால் ஐயோ என்றார். (என்னை) – எனது மனதை முன்னரே எடுத்துக்கொண்டாய், இவ்விதம் உனது திருமேனியைக் காட்டி என்னை மேலும் வதைப்பதா என்றார். (என்னை) – கல் போன்ற என்னை நீராக்கினாய், அந்த நீரையும் விட்டுவைக்காமல் பருகிவிட்டாய்.

இப்பாட்டில் ஸ்ரீவைகுண்டநாதன்படியும் இங்கே காணலாமென்கிறார்.

விளக்கம் – இந்தப் பாசுரம் மூலம் ஸ்ரீவைகுண்டநாதனின் தன்மைகளை பெரியபெருமாளிடம் காணலாம் என்றார்.

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

முதலாழ்வார்கள் திருநக்ஷத்ர சிறப்புப் பகுதி

முதலாழ்வார்களின் திருநக்ஷத்ரங்கள் 20, 21, 22 ஆகிய நாள்கள். அதற்கான சிறப்புப் பகுதியாக பெரியதிருமுடியடைவு என்ற நூலில் இருந்து இவர்களைப் பற்றிய பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன. இவை எளிதான தமிழிலேயே உள்ளதால் மேலும் விளக்கப்படவில்லை.

## பொய்கையாழ்வார்

சங்காம்சபூதரான பொய்கையாழ்வாருக்குத் திருவவதார ஸ்தலம் தொண்டை மண்டலத்திலே பெருமாள் கோயில் (காஞ்சீபுரம்). அவதாரம் பொற்றாமரைப் பொய்கையில் தாமரைப் பூவிலே. திருநக்ஷத்ரம் த்வாபர யுகம் எட்டுலக்ஷத்து அறுபதினாயிரத்துத் தொள்ளாயிரம் ஸம்வத்ஸரமான ஸித்தார்த்தி ஸம்வத்ஸரத்தில் ஐப்பசி மாஸம் சுத்தாஷ்டமி செவ்வாய்க்கிழமை திருவோணம். திருநாமங்கள் காஸாரயோகி, ஸரோமுநீந்த்ரர், பொய்கையார். திருவாராதனம் ஆழ்வார்கள் நாயனார். ஆசார்யர் ஸேனை முதலியார். இவர் பாடின திருப்பதிகள் கோயில், திருமலை, பெருமாள்கோயில், திருக்கோவலூர். இவர் அருளிச்செய்த ப்ரபந்தம் வையந்தகளியா என்கிற முதல் திருவந்தாதி நூறு பாட்டு.

காஞ்ச்யாம் ஸரஸி ஹேமாப்ஜே ஜாதம் காஸார யோகிநம்
கலயே ய: ச் ரிய: பத்யூ ரவிம் தீபமகல்பயத்

பொருள் – காஞ்சியில் உள்ள குளம் ஒன்றில், தாமரை மலரில் அவதரித்தவரும், ஸ்ரீமந் நாராயணனுக்கு தீயைக் கக்கும் சூரியனையே விளக்காக ஏற்றியவரும் ஆகிய பொய்கையாழ்வாரை நான் த்யானிக்கிறேன்.

## பூதத்தாழ்வார்

கதாம்சபூதரான பூதத்தாழ்வாருக்குத் திருவவதார ஸ்தலம் தொண்டை மண்டலத்திலே ஸமுத்ரக்கரையில் திருக்கடல்மல்லை. அவதாரம் குருக்கத்திப்பூவிலே. திருநக்ஷத்ரம் மேற்படி பொய்கையாருக்கு மற்றாநாள் நவமி புதன்கிழமை அவிட்டம். திருநாமங்கள் பூதாஹ்வயர், பூதத்தார், மல்லாபுரவராதீசர். திருவாராதனம் ஆழ்வார்கள் நாயனார். ஆசார்யர் ஸேனை முதலியார். இவர் பாடின திருப்பதிகள் கோயில், திருமலை, திருக்கடல்மல்லை, திருக்கோவலூர். இவர் அருளிச்செய்த ப்ரபந்தம் அன்பே தகளி என்கிற இரண்டாந்திருவந்தாதி நூறு பாட்டு.

மல்லாபுர வராதீசம் மாதவீ குஸுமோத்பவம்
பூதம் நமாமி யோ விஷ்ணோர் ஜ்ஞாநதீபமகல்பயத்

பொருள் – ஸ்ரீமந் நாராயணனுக்கு ஞானம் என்ற சுடரை ஏற்றியவரும், திருக்கடல்மல்லையின் தலைவரும், குருக்கத்தி மலரில் அவதரித்தவரும் ஆகிய பூதத்தாழ்வாரை நான் வணங்குகிறேன்.

## பேயாழ்வார்

நந்தகாம்சபூதரான பேயாழ்வாருக்கு திருவவதார ஸ்தலம் தொண்டை மண்டலத்திலே ஸமுத்ரக்கரையில் மயூரபுரம். அவதாரம் மணிகைரவமென்கிற கிணற்றில் செவ்வல்லிப்பூவிலே. திருநக்ஷத்ரம் மேற்படி பூதத்தாருக்கு மற்றாநாள் தசமி வியாழக்கிழமை சதயம். திருநாமங்கள் மஹதாஹ்வயர், பேயாழ்வார், மயிலாபுராதிபர். திருவாராதனம் ஆழ்வார்கள் நாயனார். ஆசார்யர் ஸேனை முதலியார். சிஷ்யர் திருமழிசையாழ்வார். இவர் பாடின திருப்பதிகள் கோயில், திருமலை, திருவல்லிக்கேணி, திருக்கோவலூர். இவர் அருளிச் செய்த ப்ரபந்தம் திருக்கண்டேன் என்கிற மூன்றாம் திருவந்தாதி நூறு பாட்டு.

த்ருஷ்ட்வா துஷ்டாவ யோ விஷ்ணும் ரமயாமயிலாதிபம்
கூபே ரக்தோத்பல ஜாதம் மஹதாஹ்வயம் ஆச்ரயே

பொருள் – திருமயிலைக்குத் தலைவரும், கிணற்றில் இருந்த செவ்வல்லி மலரில் அவதரித்தவரும், பெரியபிராட்டியுடன் கூடிய நாராயணனைக் கண்டு மகிழ்ந்தவரும் ஆகிய பேயாழ்வாரை நான் சரணம் புகுந்தேன்.

இந்த முதலாழ்வார்கள் மூவரும் அயோநி ஸம்பவராய்க் கூடிக்கொண்டு, யோகமஹத்த்வத்தினால் மூவாயிரத்து நூற்றிருபத்தஞ்சு ஸம்வத்ஸரம் பூமி ஸஞ்சாரம் பண்ணிக் கொண்டிருந்து, திருக்கோவலூரிலே திருநாட்டுக்கு எழுந்தருளினார்கள்.

முதலாழ்வார்கள் திருவடிகளே சரணம்